# பாதுகாவலன்

PATHUKAVALAN


3-5-1990

Chundikuli Branch Library

மலர்: 116 இதழ் : 15 27-4-1990 (ஏப்ரல் 27 — மே 4) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/=

## உலக இளைஞர் தினம்

6வது சர்வதேச இளைஞர் தினம் போலந்தில் 1991ஆம் ஆண்டு ஆவணியில் நடைபெறும் என திருத்தந்தை குருத்தோலை ஞாயிறு தினத்தன்று அறிவித்தார், 2ஆம் உலக யுத்தத்தின் பின் போலந்தில் நடைபெறும் முதலாவது பாரிய சர்வதேச கத்தோலிக்கக் கொண்டாட்டம் இதுவாகவே அமையும் என்றார் திருத்தந்தை.

### 21 ஆம் நூற்றாண்டு பரிஸ் நகர மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய

# 400 மில்லியன் ரூபா செலவில்

# உயர் தொழில்நுட்பப் பேராலயம்

**பிரான்சிலுள்ள பரிஸ்நகரத்தின் தென்பகுதியில் எவறி என்னும் நகரில் உள்ள சிறந்த வசதிவாய்ப்புகளுக்குத்தக்க ஒரு ஆலயம் இல்லாத குறையைப் போக்க, பத்துமில்லியன் டொலர் செலவில் உயர் தொழில் நுட்பபேராலயம் இரண்டு ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்படவுள்ளது.**

எவரி நகர மக்களுக்கு சகல வசதி வாய்ப்புக்களும் உள்ளன. ஆனால் 21 ஆம் நூற்றாண்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க ஆலயம் இல்லை. 90 பேராலயங்கள் உள்ள பிரான்சில் ஆலயத்துக்குச் செல்வோரின் தொகை அருகி வருகின்றது.

இக்குறையைப் போக்க 400 மில்லியன் ரூபா செலவில் உயர் தொழில் நுட்ப பேராலயம் அமைக்க பேராயர் கை கோர்புலோ ஆண்டகை தீர்மானித்துள்ளார்.

நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள பேராலய கட்டு வேலைகள் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தியாகிவிடும். இது வரை 2.6 மில்லியன் டொலர் (100 மில்லியன் ரூபா) சேர்க்கப்பட்டுவிட்டது.

பரிஸ் நகர சுரங்க புகையிரத நிலையங்களில் ''யார் பேராலயத்தைக் காட்டமுடியும்? நீங்கள்தான்'' என்ற விளம்பரங்கள் காட்சியளிக்கின்றன.

பங்கிலுள்ள 70, 000 குடும்பங்களுக்கு நிதி உதவி கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

21 ஆம் நூற்றாண்டின் முதலாவது பேராலயமாக அமையவுள்ள இதில் விண்ணிலுள்ள ஒளிவாங்கிக் கோளங்கள் (Satellites) மூலம் ஆலய வழிபாடுகளை ஒளிபரப்பத் தேவையான தொழில் நுட்ப வசதிகள் பொருத்தி அமைக்கப்படும்.

## ஜனாதிபதி உண்ணாவிரதம்

பனாமாவின் தற்போதைய ஜனாதிபதியான கில்லாமோ என்டாரா மார்ச் முதலாம் திகதி பனாமா பேராலயத்தில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். நீரை மட்டும் உட்கொண்டு உண்ணாவிரதமிருந்த ஜனாதிபதி பனாமாவிலுள்ள ஏழை மக்களின் துயரத்தைத் தவக்காலத்தில் தாமும் அனுபவிக்கவே இவ் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

## வண. லோங் நினைவு தினம்



எதிர்வரும் 22ஆம் திகதியன்று இலங்கை அரசாங்கம் ஓர் நினைவு முத்திரை வெளியிட்டு வண.லோங் அடிகளைக் கௌரவிக்க உள்ளது.

அமலமரித்தியாகியும் புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபருமான அருள் திரு ரி. எம். எவ். லோங் அடிகளின் 29ஆம் ஆண்டு நினைவு தினம் இம் மாதம் 30ஆம் திகதி கொண்டாடப்படும்.

...ன்று மாலை 6-30 மணிக்கு பொது நூலக வளாகத்தில்

## மெக்சிக்கோவுக்கு திருத்தந்தை

மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த யோன்டிகோ என்பவரை வணக்கத்திற்குரியவர் என வத்திக்கான் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. விரைவில் அவருக்கும் புனித பட்டம் வழங்கப்படும் எனவும் தெரிய வருகிறது. மே 6-13-ந் திகதி வரை நடக்கவிருக்கும் திருத்தந்தையின் மெக்சிக்கோ பயணத்தின் போது டிகோவை மகிமைப்படுத்தும் சிறப்பு வழிபாட்டில் கலந்து கொள்வார் என வத்திக்கான் அறிவித்தது.

## ஜேர்மன் இணைப்பால் போலந்துக்கு ஆபத்தா? -ஆயர்கள்

கிழக்கு, மேற்கு ஜேர் குறித்த பேச்சுவார்த்தைக்கு

## குளிரில் உறக்கம்

அமெரிக்காவிலுள்ள சிகாயோ டேட்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எண்பது மாணவர்கள் வீடற்ற மக்களோடு தமது ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்ட கடுங்குளிரில் படுத்துறங்கினர்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

அமலமரித்தியாகிகளும் புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபருமான அருள் திரு ரி. எம். எவ். லோங் அடிகளின் 29ஆம் ஆண்டு நினைவு தினம் இம் மாதம் 30ஆம் திகதி கொண்டாடப்படும்.



அன்றுகாலை 6-30 மணிக்கு புனித பத்திரிசியார் சிற்றாலயத்தில் இரங்கல் திருப்பலியும் பொது நூலக வளாகத்தில் வண. லோங்அடிகளின் உருவச்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

வழங்கப்படும் எனவும் தெரிய என வத்திக்கான் அறிவித்தது.

காயோ டேட்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எண்பது மாணவர்கள் வீடற்ற மக்களோடு தமது ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்ட கடுங்குளிரில் படுத்துறங்கினர்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

# வாழ்க! வாழ்க!! நீடுவாழ்க!!!



சிலாப மறைவட்ட ஆயர் பேரருள்திரு பிராங்க் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகையின்

ஆயர் திருநிலைப் படுத்தலின்

**25 ஆண்டு நிறைவு விழா**

**28-4-1990**

பிறப்பு 19-10-1931, குருத்துவம் 22-12-1956, கொழும்பு துணை ஆயர் நியமனம் 6-7-65, அபிஷேகம் 19-8-65, சிலாப துணை ஆயர் 8-6-1968, சிலாப ஆயர் 27-12-1972,

## ஜேர்மன் இணைப்பால் போலந்துக்கு ஆபத்தா? -ஆயர்கள்

கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளின் இணைப்பினால் போலந்தின் எல்லைப் பகுதிகளுக்கு ஆபத்து ஏதும் வரக்கூடாது என்ற போலந்து அரசின் கோரிக்கைக்கு ஆதரவாக அந்நாட்டுக் கத்தோலிக்க ஆயர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். 2 ஆம் உலகப் போரின் போது போலந்து அனுபவித்த சொல்லொணாத் துன்பங்களே போலந்தின் மேற்கு எல்லைப் பாதுகாப்பு மற்றும் இணைப்பு குறித்த பேச்சுவார்த்தைக்கு வழிவகுத்தன என்றும் போலந்து ஆயர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். இரு ஜேர்மன்களின் இணைப்பினால் போலந்தின் எல்லைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று மேற்கு ஜேர்மன் சட்டமன்றம் கொடுத்துள்ள வாக்குறுதிக்குத் தகுந்த உத்தரவாதம் தேவை என்ற தமது அரசின் கோரிக்கை நியாயமானது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## உயிர்ப்பு விழாவில் பேரணி கோஷங்கள்

பேர்லினில் ஏப்பிரல் 15 இல் நடைபெற்ற உயிர்ப்பும் பெருவிழாப் பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இராணுவம் இல்லாத ஜேர்மன் உருவாக்கலில் வலதுசாரி இயக்கம்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## கலைஞர்களுக்கு பேராயர் அறிவுரை

கேரள மாநிலத்தில் சங்கனாச் சேரியில் விசுவாச அறிக்கை ஆண்டையொட்டி எழுத்தாளர்கள், நாடக மற்றும் திரைப்படக்கலைஞர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் சங்கனாச்சேரியின் பேராயர் யோசவ் கலந்து கொண்டு பேசுகையில் "ஒரு கிறிஸ்தவக் கலைஞன் தனது புகழுக்காகவும், பாராட்டுக்காகவும் தனது படைப்பில் கடவுளையும், சமய மதிப்பீடுகளையும் மறந்துவிடலாகாது" என எச்சரித்தார். அருட்திரு ஊர்க்காலே கலையும், கலைஞர்களது செயற்பாடுகளும் ஓர் இறை அழைப்பு என்றார்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பதுவீண்**

## எம் கருத்து

# மேதினம்

மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினம். தொழில் புரியும் மக்களின் நலவுரிமைகள் பற்றி அனைத்து மக்களும் சிந்தித்து, புதிய திட்டங்களை வகுத்து, தொழிலாளரின் முன்னேற்றத்திற்கும், சுபீட்சத்துக்குமான தீர்மானங்களை எடுப்பதற்கு அனைவரையும் தூண்டுகின்ற தினமாகும்.

தொழிலாளர் நியாயமான தமது உரிமைகளுக்காகப் போராடும்போது அவற்றைக் கொடுக்க மறுத்த அதிகாரிகளுக்கு எதிராக ஒருமித்த குரல் எழுப்பி தமது நியாயமான உரிமைகளைப் பெற்றெடுக்கத் தூண்டும் தினமாகவே இது அமைகிறது.

திருச்சபை இத்தினத்தை தொழிலாளரின் பாதுகாவலராகிய புனித சூசையப்பர் தினமாகக் கொண்டாடுகின்றது.

தொழில் அல்லது உழைப்பு பாவத்தின் தண்டனை என்ற அபிப்பிராயம், தொழிலின் மாண்பினைக் குறைவுபடுத்துவதாக இருந்தது. புனித சூசையப்பரின் வாழ்விலே அவர் சாதாரண உழைப்பாளியாக, தொழிலாளியாக இருந்து தமது கடமையை நிறைவேற்றினார் என்பதை நாம் உணரும்போது அதன் மகத்துவம் வெளிப்படுகின்றது.

எமது நாட்டில் கடந்த காலங்களில் தொழிலாளர் தினம், அரசியல் லாபம் தேடும் தினமாகவே அமைந்தது. அரசியல் கட்சிகள் தமது பலத்தை எண்பிக்க தொழிலாளர்களை ஒன்று திரட்டினர். வீதிகளில் கோஷம் எழுப்பி பிறகட்சிகளைச் சாடுவதற்கும், இகழ்வதற்கும் ஒரு சந்தர்ப்பமாக மாற்றினர்.

சாதாரண உழைப்பாளிகளின் உரிமைகள், அவர்களது தேவைகள், தொழில் புரியும் இடங்களிலுள்ள குறைபாடுகள் இவற்றைப் பற்றி ஆராய்ந்து, அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொடுக்க, இந்த நாளில் எதுவித முயற்சிகளும் எடுக்கப்படுவதில்லை.

பொருளியல் நோக்கில் நாடுகளிடையே உள்ள பொருளாதார முறைகளை முதலாளித்துவ பொருளாதாரம், சமதர்மப் பொருளாதாரம், கலப்புப் பொருளாதாரம் என மூவகையாகப் பிரிப்பர். எமது நாடுகளிலே இப்போது கலப்புப் பொருளாதாரம் குறைவடைந்து முதலாளித்துவ பொருளாதாரம் மேலோங்கிச் செல்வது கண்கூடு.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் அங்குள்ள மக்கள் கடந்த நாற்பது ஆண்டுகளுக்குமேலாகப் பின்பற்றிவந்த சோசலிசசித்தாத்தங்களின் தன்மைகளைப் புறக்கணிப்பதையே எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய நிலையில் நமது நாட்டில்

## தேனருவி

### பாஸ்கா காலம் 3ஆம் ஞாயிறு (29-04.90)

# கூடவே வழிநடக்கும் ஆண்டவர்

''இயேசுவின் பின்னால் நானும் செல்வேன், திரும்பிப் பார்க்கமாட்டேன்'' என்றொரு எல்லோருக்கும் தெரிந்த பாடல் உண்டு. பாடுவோர் எல்லோரும் திரும்பிப் பார்க்காதவர் என்பதுமல்ல. கிறிஸ்தவ வாழ்வு ஒரு நம்பிக்கையின் பயணம். இடையிடையே தயக்கம், கலக்கம், ஏமாற்றம், முரண்பாடுகள் எனப் பல முட்டுக்கட்டைகளில் இடறி விழுவதும் இயற்கை.

இயேசுவைப் பல சீடர்கள் பின் தொடர்ந்தனர். ஆனால் ஜெருசலேமில் இயேசு சந்தித்த நிகழ்ச்சிகளைப்பார்த்த பலரும் இடறல் பட்டுவிட்டனர். அவருடைய அறிவும், அதிகாரமும் நிறைந்த போதனையும், ஆற்றலும், வியப்பும் கொண்ட புதுமைகள் பலரைச் சீடர்களாகக் கவர்ந்து கொண்டன. ஆயினும் கல்வாரியை நோக்கி நடந்த இறுதிப் பயணம், அவர்பட்ட பாடுகள், வேதனைகள், சிலுவை மரணம், அடக்கம்போன்ற எதிர்பாராத நிகழ்ச்சிகள் சீடர்கள் பலரை இலவு காத்த கிளிகள் போலாக்கின. தம் காலை வாரிவிட்டார் என்ற ஏமாற்ற உணர்வுகளோடு பலரும் தத்தம் ஊருக்கும், வீட்டிற்கும், பழைய தொழிலுக்கும் திரும்பிச் சென்றனர்.

இப்படி இரு சீடர்கள் எம்மாவுஸ் என்ற தம் சொந்த ஊருக்கு ஏமாந்த மனதோடும், சோக முகத்தோடும் திரும்பிப் பயணம் செய்து கொண்டிருந்தனர். இங்கு உயிர்த்த கிறிஸ்துவின் சந்திப்பும், உரையாடலும், உறவாடலும், பந்தி அமருதலும் இடம்

இம் மூன்று நிலையும் ஒவ்வொரு நற்கருணை வழிபாட்டிலும் இடம் பெறுகின்றன. வாரந்தோறும், ஏன் தினமும் கூட பங்கு கொள்ளும் திருப்பலிக் கொண்டாட்டம் உயிர்த்த கிறிஸ்துவை இனம் கண்டு கொள்ள எமக்கு சந்தர்ப்பமாகிறதா? திருப்பலியில் நட்புறவுக்குப் பதிலாக எத்தனை சண்டை, சச்சரவு, போட்டி பூசல்கள்! திருப்பலியில் பகிரப்படும் இறைவார்த்தை நேரத்தைப் பறிக்கும் ஒரு அலுப்பு-நிகழ்ச்சி உள்ளம் உருகுவதுமில்லை, உருப்படுவதுமில்லை. அப்பம் பிட்கும் சடங்கு ஒரு வாடிக்கையான செயலாக மாறிவிட்டது. வாழ்வில் எதையும் பகிர மனமில்லாத வேளையில் அப்பம் பிட்குதல் அர்த்தம் இழந்த பாரம்பரியமாக மாறுவதைவிட வேறு எதைத்தான் குறிக்கும்?

நற்கருணைப் பந்தி எம்மோடு கூடவே வழிநடந்து வரும் உயிர்ப்பின் ஆண்டவரைச் சந்திக்கும் அனுபவமாக வேண்டும். அதனால் கிறிஸ்தவராகிய எமக்குத் துன்பமும், ஏமாற்றமும், தோல்வியும், வீழ்ச்சியும் எம் பயணத்தைப் பின்நோக்கித் திருப்பிவிட முடியாது.

சுவாமி. ஜீவா போல் அ.ம.தி

அப். பணி. 2: 14, 22—28 அவர் என் வலப்பக்கம் நிற்கிறார்.
இரா. 1: 17—21 நம்பிக்கை கடவுள்மீது உன்றியிருக்கிறது.
லூக். 24: 13—35 அப்பத்தைப் பிட்கையில் கண்டுகொண்டனர்.

## கலைநிலா

சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின்பு, நாட்டுக்கூத்தைப்பார்க்கக்கூடிய ஓர் வாய்ப்பு கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இப்படியானதோர் வாய்ப்பை தங்கள் மன்றம் உருவாக்கித்தந்தமைக்கு,முதற்கண் எனது நன்றியைத் தெரிவிப்பது எனது கடமை.

1. தென்மோடி, வடமோடி நாடகங்கள் அனைத்தும் முழுக்க, முழுக்க மரபுதழுவிய நாடகங்கள் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இந்நாடகங்களில் கையாளப்படும் அபிநயப்பாங்குகளும் அதன் வெளித்தோற்றமும், முழுக்க முழுக்க ஆடல்களில் தான் தங்கியிருப்பதையும், நாம் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கவும் முடியாது. குறிப்பாக வடமோடிப் பாங்கு நாட்டுக்கூத்து பெரும்பாலும் கத்தோலிக்கரால், ரசித்து வளர்க்கப்பட்டு வருவதும் உண்மை, தென்மோடி மரபுநாடகங்களில், ஆட்டம்

2. கதையமைப்பு-சிருஷ்டிகம்: தென்மோடி மரபு நாட்டுக்கூத்து, கதைச்சிருஷ்டிகம் எண்ணிக்கையளவில் பார்க்கும் பொழுது, அல்லது ஆராயுமிடத்து, முழுக்க, முழுக்க கிறிஸ்தவ மதத்தழுவல்கள் தான். ஆங்கிலேயர் வருகை காரணமாய், அவர்கள் இலகுவாக தமது ஆட்சி அமைப்பை ஸ்தாபிப்பிதற்கு பாவித்த முதல் பிரசாரமேடை கிறிஸ்தவக் கதைகளைப்புனைந்து, அதை நாட்டுக்கூத்தாகப்பாடி (அப்பொழுதிருந்த புலவர்களைக்கொண்டு) கிறிஸ்தவ மக்களிடையே தென் மோடி நாட்டுக்கூத்தை, அவர்களது பாரம்பரிய மரபுக்கலைச் சொத்தாக்கியதுதான். இதற்காக அவர்களுக்கு நன்றி. அன்று அப்படியான கிறிஸ்தவக்கதைகளை, கிறிஸ்தவ மக்கள் பெரிதும் விரும்பி ஆதரவு வழங்கினர் என்பதும் உண்மை. அன்று தொட்டு,

பொருளாதார முறைகளை முதலாளித்துவ பொருளாதாரம், சமதர்மப் பொருளாதாரம், கலப்புப் பொருளாதாரம் என மூவகையாகப் பிரிப்பர். எமது நாடுகளிலே இப்போது கலப்புப் பொருளாதாரம் குறைவடைந்து முதலாளித்துவ பொருளாதாரம் மேலோங்கிச் செல்வது கண்கூடு.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் அங்குள்ள மக்கள் கடந்த நாற்பது ஆண்டுகளுக்குமேலாகப் பின்பற்றிவந்த சோசலிசசித்தாத்தங்களின் தன்மைகளைப் புறக்கணிப்பதையே எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய நிலையில் நமது நாட்டில் இப்போது நிலவிவரும் பொருளாதார முறைகள் மேலும் மேலும் வரவேற்கத் தக்கவையாக அமையக் கூடும் என எதிர்பார்க்க முடியும்.

இருப்பினும் எமது நாட்டில் தொழிலாளர்களுக்கு அன்றாட சீவியத்துக்குத் தேவையான ஊதியம் கிடைக்கின்றதா? விலைவாசி உயர்வுக்கு ஈடுசெய்யக் கூடிய வருவாய் இருக்கின்றதா? என ஆராயும்போது பெரும்பாலான தொழிலாளிகள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதை எவரும் மறுக்கமுடியாது.

இத்தகைய தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற ஊதியம் வழங்க ஒவ்வொரு தொழில் ஸ்தாபனமும் முன்வர வேண்டும்.

தொழிலாளரின் பணியைப் போற்றி அவர்களுக்கு தகுந்த உதவிகளைச் செய்துவரும் ஸ்தாபனங்கள் மட்டில் தொழிலாளரும் இன்னும் அதிக ஈடுபாடு காட்டித்தமதுமுழுமையான பங்களிப்பால் ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு அதிக அக்கறை காட்டுவார்கள் என்பது உறுதி.

மேதினமானது இத்தகைய சிந்தனையை அனைத்து மக்களுக்கும் ஊட்டவேண்டும்.

கும், வீட்டிற்கும், பழைய தொழிலுக்கும் திரும்பிச் சென்றனர்.

இப்படி இரு சீடர்கள் எம்மாவுஸ் என்ற தம் சொந்த ஊருக்கு ஏமாந்த மனதோடும், சோக முகத்தோடும் திரும்பிப் பயணம் செய்து கொண்டிருந்தனர். இங்கு உயிர்த்த கிறிஸ்துவின் சந்திப்பும், உரையாடலும், உறவாடலும், பந்தி அமருதலும் இடம் பெறுகின்ற. இந்நிகழ்சியை வாசிப்போர் இதயங்களில் நூற்றுக்கணக்கான எண்ணங்கள் பிறக்கின்றன.

நிஜமாகவே அவ்விரு சீடர்களின் மனங்களில் வெறுமையும், விரக்தியும் ஊசலாடிக் கொண்டிருந்தன. தம் வாழ்க்கையில் அனைத்தையும் இழந்துவிட்ட தோல்வி உணர்வு ஆனாலும் இயேசுவை அந்நியனாகப்பார்த்த சீடர்கள் தம் நட்பையும், விருந்தோம்பலையும் மறக்கவில்லை. அந்நியன் வடிவில் வந்த வார்த்தைகளை உதாசீனம் செய்யவில்லை.

உண்மையில் சீடர்கள் உயிர்த்தஆண்டவரைச்சந்திக்க மூன்று நிலைகள் துணைநின்றன. (1) நட்புறவு (2) இறை வார்த்தை (3) அப்பம் பிட்குதல்.

கங்களில் கையாளப்படும் அபிநயப்பாங்குகளும் அதன் வெளித்தோற்றமும், முழுக்க முழுக்க ஆடல்களில் தான்தங்கியிருப்பதையும், நாம் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கவும் முடியாது. குறிப்பாக வடமோடிப் பாங்கு நாட்டுக்கூத்து பெரும்பாலும் கத்தோலிக்கரால், ரசித்து வளர்க்கப்பட்டு வருவதும் உண்மை, தென்மோடி மரபுநாடகங்களில், ஆட்டம் குறைவாகத்தான் இன்றுவரை இருந்து வருகிறது. ஆரம்ப காலம் தொட்டு, அதாவது அண்ணாவிமார், தென்மோடி நாட்டுக்கூத்துக்களை பயிற்சி நெறிக்குள்ளாக்கிய காலம் தொட்டு, ஆட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நெறியாக்கப்படவில்லை; என்பது எனது துல்லியமானகருத்து. இன்றுநீங்கள், ஆட்டத்தையும், களப்பயிற்சிகள் கொண்டுவந்து, செழுமைப்படுத்த முயற்சிப்பதை நாம் வரவேற்கின்றோம். ஏனெனில் கூத்தினில் ஓர் பொதுமை இருக்கின்றது. அதுதான் ஆட்டம், அந்த ஆட்டம், கூத்து என்ற எந்த மோடிக்கும் பொருந்துவனாய் அமைவதினால், நாம் அந்த மரபுகளுக்கு மாறாக ஒழுக முடியாது.

(அப்பொழுதிருந்த புலவர்களைக்கொண்டு) கிறிஸ்தவ மக்களிடையே தென் மோடி நாட்டுக்கூத்தை, அவர்களது பாரம்பரிய மரபுக்கலைச் சொத்தாக்கியதுதான். இதற்காக அவர்களுக்கு நன்றி. அன்று அப்படியான கிறிஸ்தவக்கதைகளை, கிறிஸ்தவ மக்கள் பெரிதும் விரும்பி ஆதரவு வழங்கினர் என்பதும் உண்மை. அன்று தொட்டு, இன்றுவரை தென்மோடி நாட்டுக்கூத்துக்கள் அனைத்தும் கிறிஸ்தவ மதத்தழுவல்களில் தான் இருந்துவருகிறது. எனினும் கதைத்தழுவல்களிலும் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தினால் என்ன?

சமகால சமூக இயக்க இயல் மாற்ற சூழ்நிலைகளுடன் கிறிஸ்துவின் நிறைவு நிகழ்ச்சிகளின் யதார்த்தமான கருவூலங்களை ஒப்பீடுசெய்து, ஓர் புரட்சிகர படைப்பாக நாட்டுக்கூத்தில்; அறிமுகம் செய்தால், இன்றைய காலகட்டத்தில் மக்கள் பெரிதும் விரும்புவார்கள், அதுமட்டுமல்ல, நாட்டுக்கூத்து இன்னும் சிறப்பாக வளரும் கலையாக வளர்ப்பதற்குதமிழ் மக்களிடத்தில் அதிக பட்ச ஆவலைத் தூண்டும்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

Chundikuli Branch Library

# மீட்பரின் பாதுகாவலர்

### திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் வழங்கிய
## அப்போஸ்தலிக்க அறிவுரை

(இதழ் 11இன் தொடர்ச்சி)

## இயேசு ஆலயத்தில் தங்கிவிடல்



15. இயேசுவின் பிறப்பு அறிவிப்புக்குப் பின்னர், சூசை மரியாள் இருவருமே, இறைவன் மனதில் யுகங்களாக மறைந்துகிடந்த மனுவுரு எடுத்த மறைபொருளின் மத்தியில் தாம் இருப்பதை உணர்ந்தனர். "வாக்கு மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்" (அரு. 1: 14) கலிலேயாவின் சிற்றூரான நசரேத்தூரிலுள்ளபலகுடும்பங்களில் ஒன்றான, இஸ்ராயேல் நாட்டின் பல குடும்பங்களில் ஒன்றான, திருக்குடும்பத்தின் சூழலில் அவர் மக்கள் நடுவில் குடிகொண்டார். அங்குதான் "இயேசு வளர்ந்து வலிமை பெற்று, ஞானத்தில் முதிர்ந்து கடவுளுக்கு மென்மேலும் உகந்தவரானார்." (லூக். 2: 40) கிறீஸ்துவின் நீண்டகால மறைந்த வாழ்வினை நற்செய்தி ஏடுகள் சில வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறிவிடுகின்றன. இக்காலத்திலேயே மெசியாவுக்குரிய பணிக்கு இயேசு தம்மை ஆயத்தம் செய்தார். இம் மறைந்த வாழ்விலிருந்து ஒரு நிகழ்ச்சி மட்டுமே அதாவது பன்னிரண்டு வயதில் இயேசு பாஸ்காவிழாவுக்காக ஜெருசலேம் சென்றிருந்த நிகழ்ச்சியே லூக்காஸ் நற்செய்தியில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

இளம் யாத்திரீகரான இயேசு மரியாளுடனும், சூசையுடனும் இவ்விழாவில் பங்குபற்றினார். "திருநாட்கள் முடிந்து அவர்கள் திரும்பிய போது சிறுவன் இயேசு ஜெருசலேமிலேயே தங்கிவிட்டார். இது அவருடைய பெற்றோருக்குத் தெரியாது." (லூக். 2; 43). ஒரு நாட் பிரயாணத்தின் பின் இயேசு அங்கில்லாததை அவர்கள் கண்டு "தமது உற்றார், உறவினரிடையே" அவரைத் தேடத் தொடங்கினார்கள். "மூன்று நாட்களுக்குப் பின் அவரைக் கோயிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்பதும், அவர்களை வினவுவதுமாய் இருந்தார், கேட்டவர் அனைவரும் அவருடைய மறுமொழிகளில் விளங்கிய அறிவுத் திறனைக் கண்டு திகைத்துப் போயினர்" (லூக்: 2: 47) "மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்துவிட்டாய்? இதோ! உன் தந்தையும் நானும் உன்னை ஏக்கத்தோடு தேடிக்கொண்டிருந்தோமே" என்று மரியாள் கேட்டாள். (லூக். 2: 48), ஆனால் இயேசு அளித்த விடையோ எத்தகையதாய் இருந்ததெனில் "அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை?' அவர் கூறியது "ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்கவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?" (லூக் 2: 49–50)

'உன் தந்தை" எனமரியாள் குறிப்பிட்ட சூசை இம் மறுமொழியைக் கேட்டார், எல்லா மக்களும் சொன்னதும் நினைத்ததும் இது தான்: அதாவது இயேசு "சூசையின் மகன்" (லூக். 3: 23). என்றாலும், ஆலயத்தில் இயேசு அளித்த மறுமொழியானது தந்தையாகக் கருதப்பட்டவரின் மனதிற்கு அவர் பன்னிரண்டு ஆண்டுகளின் முன் ஒருநாளிரவு கேட்டிருந்த வார்த்தைகளை நினைவூட்டியது "சூசையே ... உம்முடைய மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம், ஏனெனில் அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால்தான்" அன்று முதலே தாம் இறைவனது மறைபொருளின் பாதுகாவலர் என்பதை உணர்ந்திருந்தார், இந்த மறைபொருளைத்தான் பன்னிரண்டு வயது நிரம்பிய இயேசுவின் வார்த்தை அவர் நினைவுக்குக் கொண்டுவந்தது. "நான் என் தந்தையின் இல்லத்தில் இருக்கவேண்டும்"

## நசரேத்தூர் இயேசுவின் வளர்ப்பும் கல்விப்பயிற்சியும்

16. இயேசு வளர்ந்து "ஞானத்தில் முதிர்ந்து, கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவரான (லூக். 2: 52) அந்த வளர்ச்சி திருக்குடும்பத்தினுள் சூசையின் மேற்பார்வையின் கீழ் நிகழ்ந்தது, ஒரு தந்தையின் பொறுப்புக்கமைய இயேசுவை வளர்க்கும் மிக முக்கியமான பணி, அதாவது அவருக்கு உணவும் உடையும் அளித்து திருச்சட்டத்தையும், ஒரு தொழிலையும் அவருக்குக் கற்றுக்கொடுக்கும் பொறுப்பு சூசையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

நற்கருணைப் பலியில் திருச்சபையானது தேவதாயான கன்னிமரியாளை வணக்கத்துடன் நினைவு கூர்வதுடன் புனித சூசையப்பரையும் வணக்கத்துடன் நினைவுகூர்கிறது. ஏனெனில் "நித்திய வாழ்வின் அப்பமாக விசுவாசிகள் உட்கொள்ளவேண்டியவருக்கே அவர் உணவளித்தவர்."

இயேசு "அவர்களுக்குப் பணிந்து நடந்தார்" (லூக். 2; 51). தனது பெற்றோரின் அன்புக்கு மதிப்புடன் பிரதியன்பு செலுத்தினார். இந்த விதத்தில் குடும்பக் கடமைகளையும், தான் சூசையப்பருக்கு அருகிலிருந்து ஆற்றிய தொழிற் கடமைகளையும் புனிதப்படுத்த விரும்பினார்.

---

# ஒரு நாள் ஞான ஒடுக்கம்

பலாலி ஆசிரியர்கலாசாலை கத்தோலிக்க "பீடத்தலைவர் திரு. பிரான்சிஸ் சென்றோச்" அவர்களின் தலைமையில், றோமன் கத்தோலிக்க நெறியினர்களுக்கான ஞான ஒடுக்கம், பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் மார்ச்-9இல் நடைபெற்றது.

நெறியின் விரிவுரையாளரான அருட் தந்தை R. H. சகாயநாயகம் அடிகள், அருட் தந்தை ஜீவாபோல் O. M. I ஆகியோர் சிறப்பித்ததோடு வாசகம், பஜனை என்பன மூலம் மன ஒருங்கிசைவை அளித்து மெருகூட்டினர்.

அருட்தந்தை ஆற்றிய உரையில் ஆசிரியரின் ஆளுமைப்பண்புகள் வெளிக்கொணரப்பட்டன. கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றிலுள்ள சான்றுகளை முன்வைத்து "கிறிஸ்து ஓர் சிறந்த ஆசிரியன், என்பதை எடுத்துக் காட்டினார் இதன் மூலம் கிறிஸ்தவ ஆசிரியன் "கிறிஸ்து அனுபவம்" பெற வேண்டும் என்பது தெளிவாகியது.

"ஊதாரிப்பிள்ளையின் உவமை" (புனித லூக் 15: 11–32) புதிய பார்வையில் நோக்கப்பட்டன. இதனால் பல புதிய விளக்கங்களைப் பெறக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. இருள் ஆட்கொண்ட மாலை வேளையில் இடம் பெற்ற, தபக்கால "யேசு பாடுகளின் தியான வழிபாடு" ஒளி கொணர்ந்தது. இது தபக்காலத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்ததோடு. மீட்புப்பாதையைத் தியானித்து, சிந்தித்து. வாழ்க்கைப்பாதை செல்ல வழிகோலியது எனலாம் தொடர்ந்து இடம்பெற்ற "ஒப்புரவு,- அருட்சாதன நிகழ்ச்சி மீளாய்வின் மூலம் பதினைந்து தலைப்புக்களில், ஒவ்வொருவரினதும், தனிப்பட்ட உணர்வு ரீதியான கருத்துக்கள் பரிமாறப்பட்டு கலந்துரையாடல் இடம் பெற்றது.

தகவல்

பிறிஸ்கா ஸ்ரான்லி
பலாலி ஆசிரியர் கலாசாலை
கோப்பாய்.

---

### யாழ்ப்பாணத்தில் தோன்றிய ஆண்களுக்கான முதல் துறவற சபை:-

# புனித சூசையப்பர் துறவறசபைத் துறவிகள்

யாழ், திருமலை, மட்டுநகர், பதுளை, கண்டி மறைவட்டங்களில் நூற்றிருபத்தைந்து ஆண்டுகளாக கல்விப்பணியோடு மறைப்பணியும், சமூக நலப்பணிகளும் ஆற்றிவரும் புனித சூசையப்பர் சபைத் துறவிகள் சேவைசெய்யப் பணிக்கப்பட்ட பகுதிகளில் கல்வி, ஒழுக்கம், நற்பண்புகளைப் பயிற்றுவிப்பதில் ஈடுபட்டனர். தயமைத் தியாகஞ் செய்த இத்துறவிகள் யாழ் குடாநாட்டில் கொழும்புத்துறை, இளவாலை, கரவெட்டி ஊர்காவற்றுறை முதலாம் இடங்களில் பாடசாலைகளை நிறுவி நிருவகித்து சிறந்த கல்வியை வளர்த்தவர்கள். பல ஆசிரியர்களைப் பயிற்றுவித்து யாழ். மறைவட்டத்துக்கு மாத்திரமல்ல, திருமலை, மட்டுநகர் மாவட்டத்துக்கும் சிறந்த கத்தோலிக்க ஆசிரியர்களை உருவாக்க உதவியவர்கள். முல்லைத்தீவு, மன்னார், பேசாலை ஆகியாம் இடங்களிலும் இத்துறவிகள் பணியாற்றியுள்ளனர்.

1945-ம் ஆண்டளவில்யாழ் மறைமாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பிலுள்ள கல்முனையில் தம் தலைமை மடத்தைத் தாபித்து திருமலை, மட்டுநகர் மறைமாவட்டத்தில் தம் பணிகளை மேற்கொள்ளலாயினர். அங்கும் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையை நிறுவி கத்தோலிக்க ஆசிரியர்களைப் பயிற்றும் அரும்பணியில் ஈடுபட்டனர், கல்முனை பற்றிமாக்கல்லூரி இவர்கள் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றது.

1933ஆம் ஆண்டு முதல் புனித சூசையப்பர் சபையானது மலைநாட்டிலும் அரும்பணிகள் ஆற்றியுள்ளதை எவரும் மறந்துவிட முடியாது. கற்றனிலும், பதுளையிலும் மடங்களை அமைத்து கல்லூரிகளை உருவாக்கி, மலையக மக்களின் கல்விக்கு மிகவும் போற்றத்தக்கவகையில் சேவையாற்றினர். கற்றன் புனித டொன் பொஸ்கோ கல்லூரி இவர்களது புகழை எடுத்தியம்பிக் கொண்டிருக்கும். 1933ஆம் ஆண்டுமுதல் 1975ஆம் ஆண்டு வரை இக்கல்லூரியை இவர்கள் நிருவகித்துவந்தமை குறிப்பிடத்தக்கது கம்பளையிலும் இவர்களுக்கு ஒருமடம் இருந்தது. தற்பொழுது மலைநாட்டில் இவர்களில்லை. மட்டக்களப்பிலும், திருமலையிலும் 1980க்குப்பின் யாழ்ப்பாணத்திலும் இவர்களது பணி விஸ்திரிக்கப்பட்டுள்ளது இளவாலை, ஊர்காவற்றுறை, நாரந்தனை என்னுமிடங்களில் மனைகள் அமைத்து மடங்களைத் தாபித்து தங்கள் சேவையைப் பரப்பிவருகின்றனர்.

இலங்கைத் திருச்சபையின் ஆன்மீகத்தலைவராயிருந்த பேரருட்திரு கிறிஸ்தோப்பர் பொஞ்ஜீன் மறைவட்டம் உதயமாவதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் 1864ஆம் ஆண்டு பங்குனிமாதம் 19 ஆம் திகதி இரண்டு இளைஞர்கள் இறைபணிக்குத்தங்களை அர்ப்பணித்து இப்புதிய சபையின் அங்கிகளை ஆயர் கையினாலே பெற்றுக்கொண்டனர். மறைபரப்புப்பணியில் குருமாருக்கு உதவும் பொருட்டே இச்சபை ஆரம்பிக்கப்பட்டதெனினும் பின்னர் கல்விப்பணியில் அவர்கள் பெரும்பங்கேற்கவேண்டிய காலத்தின் தேவையை ஈடு செய்வதற்காக இவர்கள் பணிகளும் மாற்றியமைக்கப்பட்டன.

ஆரம்பகாலத்தில் இச்சபை மக்களிடையில் அழைத்தல்களைத் தோற்றுவிக்கவில்லை. முதன் முதலில் இச்சபையில் சேர்ந்த இருவரில் ஒருவர் அமலமரித்தியாகிகள் சபையில் சேர்ந்து குருவானார். அவர் தீவுப்பகுதியில் மறைபரப்புப் பணியில் முன்னோடியாய்த் திகழ்ந்த அருட்திரு X. N. சந்திரசேகரர் அடிகளாராவார்.

ஆயர் பதவி ஏற்ற யூலன் ஆண்டகை அவர்களே இச்சபையின் விருத்திக்கும், வளர்ச்சிக்கும், வளத்துக்கும் வித்திட்டவர் என்று கூறலாம்.

அவர் பொறுப்பேற்றபோது இச்சபையில் ஆக 5 சகோதரர்களே உறுப்பினர்களாக விருந்தனர். ஆண்டகையவர்கள் எடுத்துக்கொண்ட கரிசனையினாலும், பேருக்கத்தினாலும், சபையில் துறவிகள் தொகை படிப்படியாக அதிகரிக்கத்தொடங்கியது. அவர்களது கல்வித்தகைமைகள் உயர்த்தப்பட்டன. ஆங்கிலம் அவர்களது கல்வித்திட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டது தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்களாக பல அருட்சகோதரர்கள் பயிற்றப்பட்டனர் ஆங்கிலம் கற்கும் வாய்ப்பற்றவுடன் பலர் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களானார்கள். அவர்களது துறவற சீருடையிலும், மாற்றமேற்பட்டது. கத்தோலிக்க பாடசாலைகளில் தேவைப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையை இத்தர்மார் ஈடுசெய்யக்கூடியதாயிருந்தது.

1914 ஆம் ஆண்டு புனித சூசையப்பர் சபைத்துறவிகளுக்கென பயிலுநர் மடமும் தாபிக்கப்பட்டது. சபையின் அபிவிருத்தி யோகபபற்றற்ற சிரேஷ்டர் என்ற வகையில் யூலன் ஆண்டகையவர்கள் சபையை எல்லா விதத்திலும் வளர்த்தெடுக்க மிகுந்த ஆவலுடையவராயிருந்தார். அவரது அயரா உழைப்பின் பயனாக ஆங்கிலத்திலும், தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற இளைஞர் பலர் இச்சபையில் துறவற அந்தஸ்துக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இளை மடங்கள் பல திறக்கப்பட்டன. பாடசாலைப் பொறுப்புக்கள் இச்சபைக்கு அளிக்கப்பட்டன. தகுதி வாய்ந்த ஆசிரியர்களாகப் பயிற்றப்பட்ட துறவிகள் சேவையில் அமர்த்தப்பட்டனர்.

(தொடரும்)

# ஒரு தனிமரம் தளிர் விடுகிறது

## சிறுகதை

இருள் படர்ந்திருந்த மேகங்கள் மெல்ல கலையத் தொடங்கின. நாள் ஒன்று பிறந்துவிட்டது என்பதை பறவைகளின் குரல்கள் அறிவிக்கத் தொடங்கின. இரவு முழுவதும் வானத்திலே அதிகாரம் செய்துகொண்டிருந்த நிலா ஆதவனின் வரவினால் வானத்திற்குள் ஓடி ஒளிந்துகொண்டது. "வனிதா! எழும்பம்மா, வேலைக்குப் போகவில்லையா" என்று அம்மாவின் குரல் கேட்டு நித்திரா தேவியின் அணைப்பிலிருந்து விடுபட்டவளாக கடிகாரத்தைப் பார்த்தபோது நேரம் ஆறு மணியைத் தாண்டியிருந்தது. ஓ! இன்று நன்றாகத் தூங்கிவிட்டேன். சே! என்ன இயந்திர வாழ்க்கை இது! என்று மனதிற்குள் சலித்தவாறே தனது காலைக்கடன்களை இயந்திர வேகத்தில் முடித்து வேலைக்கு புறப்படத் தயாரானாள். வனிதா வேலைக்கு போகும் பஸ்தரிப்பிடத்தை அடைய ஆலயத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். ஒவ்வொருநாளும் ஆலயத்திற்குச் சென்று தேவதாயிடம் மன்றாடிவிட்டுத்தான் வேலைக்குச் செல்வாள். அவள் தனது மனப்பாரங்களையெல்லாம் அந்தத் தாயிடமே அழாக்குறையாகச் சொல்லுவதைத் தவிர அவளால் வேறு என்ன செய்ய முடியும்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻

நேசகான் ஸ்ரனி அன்ரனி
உய்லூர்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻

ஆம்! தந்தையை சிறுவயதில் இழந்துவிட்ட குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்ததன் நிமித்தம் குடும்பப் பாரத்தை அவளே ஏற்கவேண்டியதாயிற்று. நோயாளியான தன் தாயையும், பொறுப்பற்ற இரண்டு தம்பிமாரையும், வயதுக்கு வந்த இரண்டு தங்கைகளின் வாழ்க்கைப் பாரத்தையும் சுமந்தவளாக ஒரு வங்கியிலே காசாளராகப் பணி புரிந்துகொண்டிருந்தாள். காலையில் எழும்பி வேலைக்குச் சென்று மாலையில் வீடு திரும்பி வீட்டுவேலைகளையும் செய்து முடிக்கும்போது அவளுக்கு வாழ்க்கையே வெறுத்துவிடும். என்ன செய்வது? தன்னுடைய குடும்பத்தை எப்படியாவது காப்பாற்றி மானத்தோடு வாழவைக்க வேண்டும் என்ற உறுதி மனதிலே ஆழமாக வேர்விட்டிருந்தது. அத்தகைய தன்னுடைய ஆசைகள், உணர்வுகள், விருப்புக்கள் எல்லாவற்றையும் இதயத்தின் ஆழத்திலே புதைத்து விட்டிருந்தாள். அவளுடைய வருமானம் நோயாளியான தன் தாயின் மருந்துச் செலவிற்கும், வீட்டுச் செலவிற்கும் போதுமானதாயிருந்தது. தந்தையாருக்கு தாய் கொடுத்த சீதனத்தைக் குடித்தே அழித்தார் என்றும் சொத்துக்களையெல்லாம் ஈடுவைத்துக்குடியிருக்கும் வீட்டைத்தவிர எல்லாவற்றையும் அழித்துவிட்டார் என்று தாய் சொல்லக் கேட்டதுண்டு. பணம் சேர்ந்துவிட்டால் உறவுகள் ஒட்டிக் கொள்ளும் என்பதுபோல் தந்தை இறந்ததோடு ஒட்டிக்கொண்டிருந்த உறவுகளும் உதிர்ந்துவிட்டன. தந்தை இறந்த பின்பு எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று இன்று அவள் வளர்ந்து விட்டாள்.

அலுவலகத்திலே வனிதா ஒரு தனிரகமாகவே அவளது சகஊழியர்களுக்குத் தென்பட்டாள். தனது வேலையை செய்வதைமட்டும் கருத்திற்கொண்டு யாரிடமும் பழகாமல் ஒரு தனித்துவமான தனிமரமாகவே திகழ்ந்தாள். வனிதா! 'கிறுக்கு பிடித்தவள், அவள் ஒரு தனிப்போக்கும், ரொம்பப் பட்டிக்காடு போலும்' என்று பலர் விமர்சித்ததை அவள் கேட்டிருக்கிறாள். சமுதாயத்தைப்பற்றியும் அதில் வாழும் நிறம் மாறும் சுயநலமான மனிதர்களைப்பற்றியும் அவ்வளவாக அவள் அலட்டிக் கொள்வதில்லை. ஆம்! வனிதா ஒரு ரகமானவள்தான். எதற்காக? தனக்கென்று ஆசைகள் ஆடம்பரங்கள், உணர்வுகள் இல்லாத வெறும் மரக்கட்டையல்ல. ஆனால் எல்லாவற்றையும் அவள் தன்குடும்ப நலனுக்காக அழித்து விட்டவள் என்பதை இவர்கள் புரிவார்களா என்று தனக்குள்ளே பல தடவைகள் நினைத்ததுண்டு. சில வேளைகளில் அம்மா இவளது திருமணத்தைப்பற்றி பேச்சு எடுத்த போதெல்லாம் "எனக்கு எதுக்கம்மா இந்தத் திருமணம். எங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்துவதே எனக்கு எல்லாம் ஆகிவிட்டது. எனக்கென்று ஒரு தனி வாழ்க்கையை அமைக்க நினைப்பது உங்களைச் சாகச் சொல்வது போலாகும். விடம்மா அந்தப் பேச்சை" என்று வெட்டிப் பேசிவிடுவாள். அவள் தாயோ "வனி, நீ இப்படியே ஒண்டிக்கட்டையா எவ்வளவு காலத்துக்குத்தான் தள்ளப்போறாய். காலா காலத்தில உன்னை ஒரு நல்லவன் கையிலே கொடுத்திட்டா நான் நிம்மதியா கண்ணை மூடிடுவன். எவ்வளவு காலத்துக்குத்தான் இப்படித் தனி மரமா வாழப் போறாய். நீ ஒரு பெண் பிள்ளை என்பதை மறந்திடாத" என்று அழாக்குறையாகச் சொன்னாள். "அம்மா இந்த வனியின் மனசில உறுதியும், உயிரும் இருக்கும் வரைக்கும் உங்களைக் காப்பாத்திறது தான் என் விதியெண்டு நான் எப்பவோ முடிவு பண்ணிட்டேன். இதுக்குமேல என்னை எதுவும் கேட்காதீங்க" என்று கண்ணீர் மல்கக் கூறியபோது தாய் அவளை அணைத்துக் கொண்டாள். தன் குடும்ப கௌரவமே பெரிதென நினைத்து தன் உடன் பிறப்புக்களும் கௌரவமாக வாழவேண்டும் என்று நினைத்தவளின் கனவுகளையெல்லாம் அவளது மூத்த தம்பி ரவி கலைத்து விட்டான். யாரிடமோ கடன் பட்டு ஜேர்மனிக்கு அவனை அனுப்பி சிறிது காலத்திற்குள் அவன் அங்கு போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டு சிறையிலிருப்பதாக யாரோ ஒருவர் இவளுக்கு எழுதியிருந்தார். ரவி உழைத்து அனுப்புவான் என்ற நம்பிக்கையும் இழந்துவிட்ட நிலையில், தன் தங்கைகளையாவது கரையேற்றி நன்றாக வாழவைக்க வேண்டும் என்ற நினைவு ஒன்று மட்டுமே அவள் மனதில் இருந்தது.

வழமை போன்று வேலைக்குச் செல்வதற்கு முன்பு ஆலயத்திற்குச் சென்று தேவதாயிடம் தன் சுமைகளையெல்லாம் அவள் பாதத்தில் இறக்கிக் கொண்டிருந்தாள். ஓ! தாயே என் மனப்பாரம் குறைய ஒரு வழி சொல்லமாட்டாயா? எத்தனையோ வாழ்விழந்த உள்ளங்களுக்கு வழிகாட்டும் நீ எனக்கு வழிகாட்ட மாட்டாயா என்று அவள் இதயம் குமுறியபோது அது அழுகையாக வெளிவந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஆலயத்தை விட்டு வெளியே வந்தபோது எதிர்ப்பட்டவனைக் கண்டு அசைந்து போனாள். "ஏய் வனி, நீ... இங்கே எப்படி நல்லாயிருக்கிறியா? என்ன செய்கிறாய்?" என்று இப்படியே வார்த்தைகளை அடுக்கிக் கொண்டு போனான் சங்கர். "சங்கர், நீங்களா, எப்படி இங்கு வந்தீங்க? ரொம்பவும் மாறிப்போட்டீங்க" என்று ஆச்சரியம் மேலிட்டவளாகக் கூறினாள். "வனி, நான் பட்டணத்திற்கு போய்ப்படிச்சிட்டு வேலையாகி இப்ப இந்த ஊருக்கு மாற்றலாகி வந்திருக்கிறேன். நீ என்ன செய்கிறாய்?" என்றான் சங்கர். "நானும் இங்கு ஒரு வங்கியிலே வேலை பார்க்கிறன். அப்பா இறந்ததோட குடும்பப்பாரம் என் தலைமேல விழுந்திற்று" என்று விரக்தியாகக் கூறினாள் வனி. "உன்னை இங்கே சந்திப்பேன் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. ஆனா நான் உன்னோடு படிச்சபோதே உன்னை எனக்கு பிடிச்சிருந்தது. அதனால்... என்று இழுத்தான் சங்கர். "சொல்லுங்க சங்கர்" என்று அவசரப்படுத்தினாள் வனி. "உன் குடும்பப் பாரத்தை நானும், நீயும் சேர்ந்து சுமந்தா எப்படியிருக்கும் என்று யோசிச்சுப் பார்த்தன் உனக்கு சம்மதமென்றால்..." என்று பேச்சை நிறுத்தினான் சங்கர். அவள் மனத்திரையில் நோயாளியான அம்மாவும், வயது வந்த தங்கைகளும் வந்தார்கள். கடலில் தத்தளிக்கின்ற ஓடத்தை இரு தண்டுகள் கொண்டு வலித்தால் கரையேறும் என்று அவள் மனதில் பட்டது. சங்கரைப் பார்க்கத் துணியாதவளாகத் தலை குனிந்தாள். மௌனம் சம்மதத்திற்கான அடையாளமாக சங்கருக்குத் தென்பட்டது.

(யாவும் கற்பனையல்ல)

---

### குருக்கள் கடவுளின் உடன் உழைப்பாளர்

# மூவேளை செபவுரை

அன்னைமரிக்கு மங்கள வார்த்தை அறிவிக்கப்பட்ட திருநாளான ஞாயிறு றோம் நகரின் புனித இராயப்பர் Basilica பேராலய வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு மூவேளை ஜெபவுரை வழங்கிய திருத்தந்தை அன்னைமரி கடவுளுடன் எவ்வாறு உடன் ஒத்துழைப்பாளராக செயற்பட்டார் என்பதையும் குருக்கள் எங்ஙனம் அன்னைமரி போல் உடன் உழைப்பாளராக இறைபணியில் செயற்பட வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார்.

மங்கள வார்த்தை அறிவிக்கப் பட்டபோது அன்னைமரி எவ்வாறு இருந்தாரோ அவ்வாறே நாமும் மனமகிழ்ந்து ஆர்ப்பரிக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம். அன்னைமரிக்கு தேவதூதன் முதன்முதலில் 'கயிதே' என்ற வார்த்தையின் மூலம் அதாவது 'மகிழ்ச்சி கொள்' என அழைப்பு விடுத்தாள். தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட பணியை முழுவதுமாக நிறைவேற்றி கடவுளுடன் இணைந்து உழைக்க மாமரியன்னை அறிந்திருந்தால் இம்மகிழ்ச்சிக்கான அழைப்பை ஏற்று முற்றிலுமாக அனுபவிக்க முடிந்தது. கடவுளின் உடன் ஒத்துழைப்பாளராக இருக்க உயரிய எடுத்துக் காட்டாக இருக்கும் அன்னைமரி, நாமும் இதில் அவளைப் பின்பற்றிப் பணிபுரிய நமக்கு உதவவேண்டும் என அவளை வேண்டுவோம்.

குருத்துவப் பயிற்சி பற்றிய உலக ஆயர் பேரவைக்காண நாள் நெருங்கிவரும் இந்நேரத்தில் குருத்துவத்திற்கு அழைப்பு விடப்பட்டுள்ள அனைவரும கடவுளின் உடன் உழைப்பாளர்களாக செயற்பட வேண்டுமென அன்னைமரியின் பரிந்துரையை நாடுவோம் கடவுளுடன். மிக ஆழமான முறையில் உடன் ஒத்துழைப்பாளராக செயற்பட குரு அழைப்புப் பெற்றுள்ளார்.

புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதற் திருமுகத்தில் "நாங்கள் கடவுளோடு உழைப்பவர்கள்" எனத் தங்களைப் பற்றிக் கூறியுள்ளார்

கடவுளோடு உழைப்பவராக இருப்பதன் தொடர்பு உடன் விசுவாசமாக இருக்கவேண்டிய தன் கடமையையும்கோடிட்டுக் காட்டும். புனித சின்னப்பர் கடவுளுடனான ஒத்துழைப்பின் முழு அர்த்தத்தையும் தெரிந்து வைத்திருந்தார்.

முற்றிலும் தாழ்ச்சி நிறைந்தவரான கடவுளின் விருப்பங்களுக்கு இயைந்த வகையில் பணிகளை ஏற்று நடத்துபவராக மட்டும் குரு நோக்கப்படுவதில்லை. மாறாக தன்னுடைய தனிப்பட்ட நடவடிக்கைகளை இறை நடவடிக்கைகளுடன் இணைப்பவராகவும் பார்க்கப்படுகிறார். கடவுளுடன் உழைப்பவராக இருக்கும் குரு தனது அனைத்து வளங்களையும், குணங்களையும் இறைவனுடனான முழு ஒத்துழைப்பில் பயன்படுத்துகிறார். இவ்வுலகில் இறையரசின் பணிக்காக தங்கள் அனைத்து சக்திகளுடன் தன்னையே அர்ப்பணித்து உடன் ஒத்துழைப்பாளர்களாகத் திருச்சபையில் மேய்ப்பர்களுக்குரிய பொறுப்புணர்வுடன் குருக்கள் செயலாற்ற வேண்டுமெனக்கிறீஸ்து விரும்புகிறார்.

இம்மேய்ப்பர்கள் சாதாரண கருவிகளாக இருக்கக் கிறீஸ்து விரும்பவில்லை. மாறாக அவர்கள் தங்கள் விருப்பம், பகுத்தாக்கும் ஆற்றல், தனித் திறமைகள் முதலியவைகளைப் பயன்படுத்தித் தங்கள் ஆழமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் ஆவல் கொண்டார். எனவே இத்தகைய ஒத்துழைப்புக்கான சிறந்த மனப்பான்மை, குருக்களை உருவாக்கும். வருங்காலக் குருக்களுக்கு ஆழமான உள்மனப் பயிற்சி அளிக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. எந்தவித கட்டுப்பாடுமற்ற தாழ்ச்சி உணர்விற்கும், தெய்வீகத்தூண்டுணர்விற்கும் தன்னையே பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய குரு தன் முழு உள்ளத்தோடும், உடலோடும் இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்கான விருப்பத்தையும் தன்னுள் உயர்த்திக் கொள்ள வேண்டுமென, குறிப்பாக அனைத்துத் தியாகங்களையும் முழு மனதுடன் ஏற்று தாராள மனத்துடன் கூடிய தெய்வீக ஒத்துழைப்பில் அவற்றை இணைக்கும் வண்ணம் குருமாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

கிறீஸ்து இவ்வுலகில் மனுவுரு எடுப்பதற்கு வழியாக செய்யும் வண்ணம் மங்கள வார்த்தை அறிவிக்கப்பட்ட நாளில் தன் முழு இசைவு வழங்கிய அன்னைமரியின் எடுத்துக் காட்டு இறைவனுடன் ஒத்துழைப்பாளராக இருக்க வேண்டிய தன் அவசியத்தை நமக்கு நினைவூட்டுகிறது. இவ்வுலகில் திருச்சபையின் வாழ்வு கூட பெரும் பகுதியில் குருத்துவ ஒத்துழைப்புக்கான தாராள மனப்பான்மையுடன் தொடர்புடையதாக உள்ளது. இவ்வாறு மூவேளை ஜெபவுரை வழங்கிய திருத்தந்தை கிறீஸ்துவுடன் உடன் உழைப்பாளர்களை திருச்சபைக்கும் பெருமளவு பெற்றுத்தர அன்னைமரியின் பரிந்துரையை வேண்டி ஜெபித்தார்.

# கிறிஸ்தவ வாழ்வில் பெண்களின் பங்கு

பரந்து விரிந்த இந்த உலகிலே கடவுளின் உயர்ந்த படைப்பான மானிடப் படைப்புக்கு உட்பட்ட நாம் அதன் பயன்களை முழுமையாக அனுபவிக்கின்றோமா என்பது தான் கேள்விக்குறி? அதிலும் பெண்களாகப் பிறந்து விட்ட நாம் ஆரம்ப நாள் தொட்டே ஒரு பொறுப்பான வாழ்வு வாழ வேண்டும் என்பது உலக நியதி. கிறிஸ்தவப் பெண்களாகிய எம் மத்தியில் ஒரு புதிய உணர்வு இருத்தல் அவசியம். காரணம் திருமணம் என்ற பந்தத்தில் இணைந்து குழந்தைகள் பெற்றெடுக்கும் பெண்கள் பிள்ளைகளின் ஆரம்ப காலம் தொட்டு அவர்களின் கிறிஸ்தவ வாழ்வைப் பண்படுத்த முயல வேண்டும். அப்படிச் செய்யும் போதுதான் வளர்கின்ற நம் குழந்தைகள் பெரியவர்கள் ஆனதும் உண்மையான கிறிஸ்தவ வாழ்வைக் கடைப்பிடித்து வாழக் கூடியதாக இருக்கும். இளமையில் நாம் ஊட்டும் கிறிஸ்தவக் கல்வி அவர்களின் வளர்ச்சிக்கு அடி உரமாக அமைந்துவிடுகின்றது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" இந்த வரிகளில் எத்தனை உண்மைகள் சற்று சிந்தித்து செயற்படுவோம். வளரும் நம் பிள்ளைகள் எதிர்காலத்தில் தேவ அழைத்தலுக்குள் புக நாம் வழிகாட்டியாக இருக்க வேண்டும். சிறு வயது தொட்டே தேவ அழைத்தலுக்கான ஆயத்தங்களையும், அதன் உண்மைத் தத்துவங்களையும் மனதில் பதியவைக்க வேண்டியது பொறுப்பான ஒவ்வொரு தாயினதும் தலையாய கடமையாகும்.

பிள்ளைகள் மட்டில் இத்தனை கடமைகள் கொண்ட பெண்களுக்கு இன்னுமோர் முக்கிய பங்களிப்பு இருக்கத்தான் செய்கின்றது. கிறிஸ்தவ பெண்களாகிய நம்மில் பலர் தேவாலயத்துக்குச் செல்லும் போது தம் கணவருடன் செல்வது குறைவு. பிள்ளைகளை மட்டும் தங்களுடன் அழைத்துச் செல்லும் பெண்கள் கணவன்மார்களைப்பற்றி அக்கறை கொள்வதில்லை. இவ்விடயத்தில் சில கணவன்மார் விதி விலக்காக இருப்பதும் உண்மையே. எனினும் கூடியவரை கணவனை அழைத்துச் சென்று வழிபாட்டில் பூரணமாகப்பங்கெடுக்கச்செய்வது பெண்களின் முக்கிய பொறுப்பாகும். திருமுழுக்கு என்னும் தேவதிரவிய அனுமானத்தால் கிறிஸ்தவ வாழ்வின் முன் கதவுகளைத் திறக்கும் நாம் தொடர்ந்து அந்த வாழ்க்கையில் ஓர் பூரண நிறைவை அடைய முயற்சி எடுக்க வேண்டும். பிற சமய மக்களின் மத்தியில் கிறிஸ்தவர் என்று பெருமையோடு வாழ்கின்ற நாம் அவர்களுக்கு ஒரு சிறப்பான முன் மாதிரியாக இருக்க வேண்டும். இந்தியாவின் புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவரான அண்ணல் மகாத்மா காந்தி ஒரு கட்டத்தில் கூறினார் நான் கிறிஸ்தவத்தை நேசிக்கின்றேன், ஆனால் நாங்கள் கிறிஸ்தவர்கள் என கூறும் மக்களை வெறுக்கின்றேன் என்று...... இதற்குக்காரணம் ஒரு உன்னதமான மதத்தை சேர்ந்த நாம் உண்மையான வாழ்வு வாழ்வதில்லை என்பதையே பிரதிபலிக்கின்றது. எனவே கிறிஸ்தவ பெண்களாகிய நாம் எல்லோருக்கும் முன் மாதிரியான ஓர் வாழ்வு வாழ அன்னை மரியாளின் அன்பு வழி நடப்போம்.

சகாய லூர்த்து நாயகி
அருள்நேசன்,
நெடுந்தீவு

## 'வளர்க'

உழைத்து வாழ வேண்டும்
—பிறர்
உழைப்பில் வாழ்ந்திடாதே
என்பது சினிமாக்குரல்.

உழைப்பு என்பது படைப்பை விருத்தி செய்யும் புனிதமான பணியின் ஊற்று. பரந்த இவ்வுலகில தான் வாழ்ந்தன குடும்பம் வாழ அதன் வழியாக சமூகம் வாழ எண்ணி உழைப்பவனே தொழிலாளி என்ற மகத்துவம் பெறுகின்றான். உழைப்பு என்பது பாவத்தின் விளைவோ தண்டனையோ அல்லவாதாக அது ஒரு மனித உரிமையும், கடமையுமாகும். இதையே உ-ம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகிறது.




உழைக்காதவன் உண்ணாதிருக்கட்டும் என புனித சின்னப்பர் கூறுவதுபோல உழைப்பவனே உண்பதற்கு தகுதியுடையவன் ஆகின்றான். உண்பது மனித இயல்பாவது போல உழைப்பதும் மனித இயல்பே. நசரேத்தில் யேசு உழைத்தார் தச்சுவேலையில் நெற்றி வியர்வை சிந்தினார். இது புனித சூசையப்பரை தொழிலாளரின் மாதிரிகையாக உருவாக்கியது.

சோம்பிச் சோம்பித் திரிந்து நாளும் மற்றவனில் தங்கி வாழ நினைக்கும் ஒவ்வொருவனுக்கும் தொழிலாளர் தினம் ஒரு சவாலாகவே உள்ளது. சளையாது உழைத்து மலையாக உயர்ந்து நிற்போரைக் கண்டு பொறாமை அடைவதும், சொந்தக்காலில் முன்னேற முயல்வோருக்கு ஆயிரம் தீங்கு விளைவிக்க நினைப்பதுவும் உழைக்காதவனின் அடிப்படை மனவியல்பு.

மேதினம் உலகெங்கும் உள்ள தொழிலாளர் அனைவரையும் நினைவு கூர்ந்து பொன்னாகப் போற்றி மதிக்கின்றது. தொழிலிலே பல கஷ்டங்கள் உண்டு கவலைகள் உண்டு தோல்விகள் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. அனைத்தையும் சாந்த மனத்தோடு ஏற்று தன் பணி தேவன்பாதம் வைத்து காணும் வெற்றியே தொழிலாளியின் உண்மையான பலாபலனாகும்.

எனவே தொழிலாளர் வாழ்க! வளர்க! உலகமெங்கும் அவர்களுக்கு இன நிற, பேத, மத அடிப்படையில் நிலவும் வேறுபாடுகள் அடியோடு ஒழிக என புரட்சிக்குரல் கொடுப்போம். முதலாளி, தொழிலாளி பாகுபாடுகள் அழிந்து எங்கும் சமத்துவம் நிலவ யாவரும் உழைப்போம். தொழிலாளியின் சுதந்திர மூச்சே யாவரதும் உயிர் மூச்சாகும்.

மே. யஸ்ரின் செளகான்
சில்லாலை.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு — 63

அடைக்கலம்:- கத்தோலிக்க ரீச்சர்மார் இல்லாம பாடசாலையள் திண்டாடுதுகள் போல அண்ணே!

குருசுமுத்தண்ணை:- எட தம்பி ஆசிரியர் கல்லூரியிலையும், பல்கலைக் கழகத்திலையும் படிக்க ஒழுங்கு செய்தாலும் அங்கையும் படிக்க ஆளில்லையாமல்லோ!

அடைக்கலம்:: இதென்னண்ணே புதுககதை சொல்லிறியள்?

குருசுமுத்தண்ணை:- ஆசிரியர் கல்லூரியென்ன, பல்கலைக் கழகமென்ன, அதுக்கு முதல் போறதுக்கு சதாரண / உயர்கல்வி படிக்க படிப்பிக்க ஆளில்லாம அலையேக்க...

அடைக்கலம்:- ஏன் அண்ணை இதுக்கு இந்த ரியூட்டறிகள் வழி செய்யுமே.

குருசுமுத்தண்ணை:- ஆரத்தம்பி பிடிக்கிறது அதுக்கு. அடிப்படையக் கற்பிக்க ஆரும் முன்வராட்டி பிரசங்கத்தைக் கேட்டுத்தான் சோதின எழுதவேணும் போல, மேல் மட்டத்துக்குத் தேவை யெண்டா கீழ்மட்டத்திலயெல்லோ முதல்ல தொடங்கவேணும், இதுக்காரு முன் வாறது? இதுக்காரு மணிகட்டுவது?




## கலப்புத் திருமணம்

திருமணம்
சமூகச் சார்புடையது.
சமுதாயத் தாக்கங்களையும்
விளைவுகளையும் பெறுகிறது.
மண வாழ்வு பற்றி
திருச்சபையும் அரசும்
அதிக கவனமெடுத்து
சடங்கு முறைகளையும்
சட்டங்களையும்
ஏற்படுத்தி உள்ளது,
கிறிஸ்தவ சபைப்பிரிவினருடன்
கலப்புத்திருமணம் செய்யும் போது
பிரச்சனைகள் உருவாகும்.
பழையகால ப்பலபிரச்சனைகள்
இன்றுள்ள
மனமாற்றம், பரந்தமனம்
என்பவற்றால்
தவிர்க்கப் பட்டுள்ளன.
இருப்பினும்
பிரச்சனைகள் தோன்றும்
தலைவர்கள் பேசித் தீர்ப்பதே முறை.
கிறிஸ்தவரும்
கிறிஸ்தவர் அல்லாதவரும்
செய்யும் கலப்புத்திருமணங்கள்
பிரச்சனைக்குரியவை தான்
கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில்
வேற்று சமயத்தவர்களை
மணக்கும் போது
பிள்ளைகள் யார்சமயம்
என்ற விடயத்தில்
பிரச்சினை தோன்றும்.
சிலர் தாயின் பக்கம்
சிலர் தந்தை பக்கம் என்றோ
வயது வந்த பின்
சமயத்தை தெரியலாம் என்பதோ
பலருக்கு
நியாயமான திருப்தியான
முடிவாகத் தோன்றலாம்.
ஆனால் இம் முடிவு
உளவியல் அடிப்படையிலும்
சமய அடிப்படையிலும்
அதிக தீமையை விளைவிக்கும்
பிள்ளைகள் மனதில்
அதிக குழப்பத்தையும்
இறை இயல் பற்றி
எதுவுமே தெரியாத
தன்மையையும் ஏற்படுத்தும்.
கலப்புத்திருமணம்
மத குருமாருடன்
ஆலோசிக்க வேண்டிய ஒன்று.
கிறிஸ்தவனுக்கு திருமணம்
வாழ் நாள் எல்லாம் இருக்க வேண்டிய
பிரிக்க முடியாத ஒரு பந்தம்.
உடைக்க முடியாத ஒரு ஒப்பந்தம்
கிறிஸ்து—திருச்சபையின்
உறவு—ஒன்றிப்பிற்கு ஒரு அடையாளம்.
கிறிஸ்து திருச்சபையுடன்
பிரிக்க முடியாதவாறு இணைந்திருப்பது போல
கணவன்—மனைவி ஒன்றித்திருக்க வேண்டும்.
சச்சரவுகள்—பிரச்சனைகள்
துன்பங்கள்—துயரங்கள்
வேதனைகள்—வெறுப்புக்கள்
இவை தவிர்க்கப் படமுடியாதவை.
இவை எல்லாம் சவால்களாக்கப்படவேண்டும்.
இவை எல்லாம் சாதனை படைக்க உதவ
எதற்கும் மனமுடைவு
இறுதியில் மணமுறிவு
என்றில்லாமல்
எதிலும் மனத்திடம்
எப்போதும் செப உதவி
கடவுள் வெளிப் படுத்திய
திருவுளம் இதுவே
எனும் நல்ல மனம் எமை வாழவைக்கும்.

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

# அருள் வாக்கு அறிவோம்

## நற்செய்திக்கோர் பின்னணி — (10)

### மாற்கு நற்செய்தி நூலின் பிரிவுகள் — (ஆ)

இரகசிய மெசியா:- அன்பானவாசகர்களே!

இயேசு கடவுளின் மகன் என்று எழுதிய மாற்குதான், அதே நேரத்தில் தான் மெசியா என்பதை எவரும் அறியாமலிருக்க யேசு விரும்புவதாகவும் சுட்டிக் காட்ட தவறவில்லை. புதுமைகள் பல செய்தமதாண்டவர் கடவுளின் மகன் எனவும் மெசியா, எனவும் மக்கள் புகழ ஆரம்பிக்கும் போது. தம்மைப்பற்றியும் தமது புதுமைகளைப்பற்றியும் ஒருவருக்கும் தெரிவிக்க வேண்டாமென்று இயேசு கட்டளையிடுவதைப் பல இடங்களில் காண்கின்றோம். (1:25,34.44.45; 3,10 11, 7,36;8,24) தொழுநோயாளிகளைக் குணப்படுத்திய பின் (1:44) குருடனுக்குப் பார்வையளித்தபின் (8:26) இன்னும் சில புதுமைகளுக்குப் பின்னும் எவருக்கும் சொல்லவேண்டாம் என்று இயேசு ஆணையிடுவதாகக் குறிப்பிடுகின்றார்.

நீரே மெசியாவென இராயப்பரின் விசுவாச அறிக்கைக்குப் பின் அதைப்பற்றி ஒருவருக்கும் தெரியப்படுத்தக் கூடாதெனவும், அவர்களை யேசு கண்டிப்பாக கேட்டுக்கொண்டதாகக் கூறுகிறார், மாற்கு (8;30) பலசந்தர்ப்பங்களில் தனது கடவுட் தன்மையினை மக்கள் அறியாதிருக்க இயேசு விரும்பினார் என்பதை மாற்கு குறிப்பிடுகின்றார். இயேசு உண்மையாகவே மாட்சிமை மிக்க கடவுளின் மகன், தந்தையால் வாக்களிக்கப்பட்ட காலாகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மெசியா தான் நான் என இயேசு அறிக்கையிட விரும்பவில்லை என்பதை தனது நூலில் நன்கு உணர்த்துகின்றார். இயேசுவின் இந்த மெசியா இரகசியத்தைப்பற்றி நற்செய்தியாளர் மாற்கு எழுதுவதன் காரணம் இயேசு மனுமகன் என்பதைப் போதிக்கவே யேசு மெசியா வென இராயப்பர் அறிக்கையிட்டபின் தான் மெசியா மட்டுமல்ல, தான் உண்மையாகவே மனுமகன் என்பதை விபரமாக அப்போஸ்தலர்களுக்கு விளங்கப்படுத்த "மனுமகனும் மெசியாவுமானவர் பாடுகள் படவும், புறக்கணிக்கப்படவும் வேண்டுமென இயேசு கூறி மெசியாவைப்பற்றி அப்போஸ்தலர்கள் கொண்டிருந்த தவறான எண்ணத்தைப் போக்குவதாகவும் நற்செய்தியாளர் மாற்கு நயம்பட எடுத்துரைக்கின்றார் தனது நூலில், ............ தொடருவோமா?

எஸ். அந்தோனிப் பிள்ளை

## அறிந்துகொள்ளுங்கள் (106)

## வரலாற்று அரசியல் பின்னணி

ஏரோது அந்திப்பாஸ்:-

பெரிய ஏரோது இறந்தபின் கலிலேயாவிற்கும், பெரயாவிற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டவன். அந்த ஏரோதனை நற்செய்தியில் பல இடங்களில் சந்திக்கிறோம். இவன் தனது புதிய தலைநகரான திப்பரியஸ் நகரை கிரேக்க மரபுப்படி கட்டுவித்தான். தந்தையின் எல்லாத் தீய குணங்களும் ஏரோது அந்திப்பாசுக்கு இருந்தது. அதேவேளையில் மக்கள் முன் வேடம் போடுவதில் வல்லவன். வெளித்தோற்றத்துக்கு மட்டும் யூத சமயத்தைப் பின்பற்றினான், திருயாத்திரை விழாக்களுக்கு ஜெருசலேமுக்குச் சென்றான். திபேரியாவில் செபக்கூடம் கட்டிக் கொடுத்தான். நாணயங்களில் உரோமைப் பேரரசனது உருவத்தை பொறிக்கவில்லை.

நான்காம் அரெடாஸ் என்ற நபாதிய அரசனின் மகளை முதலில் மணந்தான். பின் ஒரு சமயம் உரோமைக்குச் சென்ற போது தனது ஒன்றுவிட்ட சகோதரன் மனைவி ஏரோதியாளை மனைவியாக்கிக் கொண்டு வந்தான் இதனால் முதல் மனைவியைக் கொன்றுபோட்டான். இவனது இந்த கெட்ட நடத்தையை ஸ்நாபக அருளப்பர் கண்டித்தார். இதன் நிமித்தம் ஏரோதியாள் சமயம் பார்த்து ஸ்நாபக அருளப்பரின் தலையை வெட்டுவித்தாள் என்று நற்செய்தியில் பார்க்கிறோம். (மத். 14: 3-12)

இந்த ஏரோது அந்திப் பாசைத்தான் யேசு நரியென்று குறிப்பிடுகிறார். (லூக். 13: 32) இந்த ஏரோதிடம் தான் ஆண்டவர் யேசுவைப் பிலாத்து அனுப்பிவைத்தான். (லூக். 23: 6-12)

ஏரோது அந்திப்பாஸ் தனது முதல் மனைவி அரடேயாசின் மகளைக் கொன்றதால் அரடேயாஸ் அவனுக்கு எதிராகப் படை எடுத்தான். அப்போது சீரியாவின் உரோமைப் பிரதிநிதி ஏரோதுக்கு உதவிசெய்ய மறுத்துவிட்டான். இதனால் இவன் தோற்கடிக்கப்பட்டான். இதேவேளை ஏரோதியாளின் தமையன் அக்கிரிப்பாவின் கையாள் ஏரோதுக்கு எதிராகப் பேரரசன் கிளாடியசிடம் குற்றம் சாட்ட அவன் பயனாக ஏரோது ஏரோதியாளுடன் கி. பி. 39ல் நாடுகடத்தப்பட்டான்.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்

வாசக அன்பர்களே!

உயிர்ப்பு விழாவைக்கொண்டாடி மகிழ்ந்தோமல்லவா? உயிர்த்த யேசு உலக மக்கள் அனைவருக்கும் துணையாக மட்டுமல்ல, பிணையாகவும் நின்றார், என்ற உண்மையைக் கடந்த வாரங்களிலே நீங்கள் கேட்டு அனுபவித்தீர்கள். அவர் தன்னிடம் இருந்தவற்றில் எல்லாவற்றையும் மக்களுக்காக விட்டுச் சென்றார். ஏன்! தன் ஆடையைக் கூட தனக்கென்று வைத்திருக்கவில்லை என்ற உண்மையை- "என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள் உடைமீது சீட்டுப் போட்டார்கள்" என்பதையும் சங்கீத ஆசிரியர் தெளிவாக விளக்கியதைக் கேட்டீர்கள் தானே!

இவ்வாறு மற்றவர்களுக்குப் பிணையாய் நிற்பவன் அனைத்தையும் இழக்க வேண்டி நேரிடலாம்

நமது பழமொழியாளர் கூறுவது இப்படி. " துணைப் போனாலும் - பிணை போகாதே" என்று. உலக வாழ்விற்கு இது ஒத்துவரும். ஒருவனுக்குப்பிணை நிற்கப்போய் தமது சொத்தையும், மானத்தையும் இழந்து நிற்கும் அநேகர் இன்றும் நம்மிடையே உண்டு. ஆனால் திரு நூலின் படி பிணைநிற்பவன் அனைத்தையும் ஏற்கத் தயாராய் இருத்தல் வேண்டும்.

20/16இல் அன்னியனுக்குப் பிணையாய் நின்றவனின் ஆடையை எடுத்துக்கொள். அன்னியர்களுக்காகவும் அவனிடம் பிணையை வாங்கிக் கொள்" என்று நடு நிலை வகிக்கின்றார் நம் ஆசிரியர்.

இன்னொன்றையும் கேளுங்களேன். நாம் ஒருவரின் வெளிவேடத்தையும், வாய்ச்சாதுரியங்களையும் கண்டு அவரின் பேச்சுக்களையோ - அவர் தரும் பொருட்களையோ மனமுவந்து ஏற்கின்றோம். ஆனால் இது "இறால் போட்டு சுறா பிடித்த" கதை போலல்லவா மாறிவிடும். இதை உணராத மக்கள் முன்வருவதைக் கண்டு மகிழ்ந்து பின்னால் வரும் கெடுதிகளை நினைத்துப்பார்ப்பதில்லை.

தூண்டில் போட்டு இழுத்து சுவைபடச் சிந்திக்க அழைக்கின்றார். திருநூல் ஆசிரியர் 20/17-ல் " வஞ்சகத்தின் அப்பம் மனிதனுக்கு சுவையுள்ளதாய் இருக்கின்றது. ஆனால் பின்பு அவன் வாய், பொடிக்கற்களால் நிறையும்."

இதையே நமது பழமொழியாளரும் -
"நக்குண்டார் - நாவிழந்தார்" என்றார்கள்.

சிந்தியுங்கள். திருந்துங்கள்.

### வாரம் ஒரு சிந்தனை:

"உன் இதயம் ஒரு மண்பானை! அந்தப்பானை கீழே விழாமல் பார்த்துக் கொள்! விழுந்தால் உன் எண்ணங்கள் சிதறி விடும்."

அன்புடன்
எஸ். ஏ. நாதர்

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 4<br>சுடர்: 13 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

விழி வழி:

### அடித்தளம்

வண. பிதா லோங் அடிகள்

ஆசியா பவுண்டேசன், இந்தியத் தூதரகம் அமெரிக்கத் தூதரகம் போன்ற ஸ்தாபனங்களின் உதவியாலும், பொது மக்களினதும் உதவியாலும் கட்டப்பட்டு பல்லாயிரம் விலை மதிக்க முடியாத புத்தகங்கள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைக் கொண்டிருந்த நூலகம் 1-6-1981 ஆம் திகதி இரவோடு இரவாகத் தீக்கிரையாக்கப்பட்டது. நூலகம் தீயில் சங்கமித்த இரவின் அதிகாலைப் பொழுது (2-6-198 ) சம்பத்திரிசியார் கல்லூரியின் இரண்டாம் மாடியிலிருந்து இக்காட்சியைக் கண்ணுற்ற மாமேதை தாவீதடிகள் கண்ணயர்ந்தார்.

ஆனால் நூலகத்தின் வாசலில் கம்பீரமாக, வெள்ளையுடை அணிந்த, வெள்ளை உள்ளம் கொண்ட அந்த வெள்ளை மனிதர் அசையாது நின்றார். அந்த அக்கிரமச் செயலைக்கண்டு அவர் அசையவில்லை. வாய் திறந்து ஒரு ஒலி கூட எழுப்பவில்லை அவர் கல்லாக கலைஞன் வடித்த சிலையாகக் கலங்காது நின்றார். அந்த மா மனிதர் யார்?

1985-1989 வரை எம் மண்ணில் கேட்ட ஆயுத ஒலிகளுக்கிடையேயும் அந்த இடத்திலே அசையாது அந்த மனிதர் எப்படி நின்றார்? இன்றும் அவர் அசையாது அப்படியே நிற்கிறார். அந்த அற்புத மனிதர் யார்?

1936 தொடங்கி 1953 வரை வடமண்ணின் கல்வி, கலை கலாசார விளையாட்டுத்துறை போன்றவற்றிற்கு உரம் இட்டு, உயர்த்தி விட்ட வண. பிதா திமோத்தி லோங் அடிகளார்தான். பொதுசன நூலகத்தின் இன்றும் அசையாது நிற்கும் மாமனிதராகும்.

"உன்னத மானதே எமக்கு உகந்தது" என்ற தாரக மந்திரத்தை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபராக இருந்கையில் கல்லூரி யூடாக வடமண்ணெங்கும், ஏன் நாடெங்கும் பரப்பினார் என்று கூடக்கூறலாம். நூலகத்தின் அடித்தளம் அவர்தான்.

வண. பிதா லோங் அடிகளார் எம் மக்களுக்காக ஆற்றிய பணிக்காக, அவரையொரு தேசியத் தலைவராக மதித்து அரசு முத்திரை வெளியிட முன் வந்துள்ளது. முத்திரை வெளியீடு ஒன்று போதுமா?

30-4-1961 அவரின் ஆன்மா ஆண்டவரை அடைந்த நாள். அந்நாளில் அடிகளார் எந்த இடத்தில் எதற்கும் கலங்காது அசையாது நின்றாரோ; எதற்காக அங்கு நின்றாரோ !! அந்த இடம், அவரின் எண்ணப்படி எம் மக்களின் அறிவுப்பசியைப் போக்கும் அற்புத அறிவாலயமாக மாற மாற்றம் பெற அன்னை மரியிடம், அருள்நாதர் யேசுவிடம் இருகரம் கூப்பி வேண்டுவோம்.

அன்பின்
அன்புவிழி

### காத்திருப்போம்

காத்திருப்போம காத்திருப்போம்
காலமெல்லாம் காத்திருப்போம்
கலகங்கள் மத்தியில்—சிறைந்த
இதயங்கள் எத்தனை.
உலகெங்கும் கர்த்தர்—அவரி
இலங்கும் வித்தகர்.
சமாதானம் வேண்டி—நாம்
சண்டைகள் புரிய வேண்டாம்.
சர்வவல்ல பரமனிடம்—நல்ல
செபங்கள் பலசொல்லி
செவி மடுக்கும் தந்தையின்—இறை
மொழிகளைக் கேட்போம்.
அவர் சித்தம் எதுவோ—அதனை
யாரும் உணர முடிவதில்லை.
காலம் கனியுமட்டும்—அதற்காக
நாம் காத்திருப்போம்.

செ. இமாக்குலெற் (வளர்மதி)
அ. எ. 227.

Chundikuli Branch Library

## விபிலியக் குறுக்கெழுத்துப் போட்டி 16 இன் முடிவுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 எ | ப் | பி | ரா | மீ | 2 ம் |
| 3 ம் | சு | 4 அ | த் | 5 த | ரு |
| 6 மா | தி | யா | 7 ன் | ✱ | ஆ |
| ஞ | ✱ | ச் | பா | 8 வு | ல |
| 9 வே | ல் | 10 ரி | வீ | 11 டி | க |
| 12 ல் | னா | சி | ச் | மூ | ✱ |

பரிசு பெறும் நற்பேறாளர்
செல்வன் சா. விக்ரர்
டீ மெனி
குளமங்கால்
மல்லாகம்.

பாராட்டுப் பெறுவோர்:

1. A. அருளானந்தம் (ஜஸ்மின்), 2. அ. செபமாலை, 3. அ. ஜெயா மேரி சொய்சா, 4. ஜே. ஆனற் சொய்சா, 5. றாஜன் குலாஸ், 6. ஜே. கீதாஞ்சலி சோசை, 7. ஜே. தீபன் சொய்சா. 8. S. நோபேட், 9. M. மாலா குலாஸ், 10. ஜே. மெடோனா தீபா சொய்சா, 11. அ. மரியதாசன் குலாஸ், 12. யோ. ஆன் அன்பரசி, 13. செதிரேசா லெம்பேட், 14. M. அன்னம்மா குலாஸ், 15. ஜே. அகிலன், சொய்சா, 16. V. பத்தி கூஞ்ஞ

## குறுக்கெழுத்துப் போட்டி-17

(அப். பணி 13—18 அதி.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | ✱ | | 2 |
| 4 | | | து | ✱ | |
| 5 | ✱ | ✱ | 3 | ✱ | |
| 6 | | | | 7 | ம் |
| | வா | ✱ | | | ✱ |
| ✱ | ✱ | 8 | | | |

இடமிருந்து வலம்

1. "உங்கள் குற்றத்தின் விளைவு உங்கள் தலைமேல் விழட்டும்" என்பவர் இவர். (3)
2. யூதர்கள் ஒன்று சேர்ந்து மக்களை — சின்னப்பரை கல்லால் எறிந்தார்கள். (வளம் மாறியுள்ளது) (2)
4. இவை ஊடாகவே நாம் கடவுள் அரசில்நுழைய வேண்டும் என்பது சின்னப்பர் உரை (4) (வளம் மாறியுள்ளது)
6. சின்னப்பரும் சீலாவும் சிறையினின்று வெளியேறி இவளின் வீட்டுக்குச் சென்றனர் (3)
8. சின்னப்பரின் தொழில்—செய்வதாகும் (4)

மேலிருந்து கீழ்

1. 1ம் வேதபோதக பயணத்தில் மாற்கு சின்னப்பரை இந் நாட்டில் விட்டுப் பிரிந்தார். (5)
2. இறந்தோரின் உயிர்ப்பு என்ற செய்தியைக் கேட்ட சிலர் இது செய்தனர். (4)
3. கிறிஸ்தவ நெறியை இந்நெறி எனவும் அழைப்பர் (3)
7. நீர் எம் புதல்வர் இன்று உம்மை நான் ஈன்றெடுத்தோம் இங்கு புதல்வர் என்பதன் பொருளுள்ள கடை கெட்டுள்ளது. (3)

## மரண ஞாபக அறிவித்தல்

ஏப்ரல் — 29

## கலைநிலா...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

எப்படி நாடக உத்திகளில் நாட்டுக்கூத்தில், பரதம், அபிநயம், ஆட்டங்கள் இவைகளை காலத்திற்கேற்ற விதத்தில் மாற்றி அமைக்க விளைகிறோமோ அதேபோல் சிருஷ்டிகங்களிலும், புதுமைக்கருத்துக்களை அறிமுகம் செய்வதில் தவறு இல்லை என்பது, எனது ஆணித்தரமான கருத்து.

இ. வரதராசா
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

★ ★ ★

கருத்துக்களுக்குரியவர் கட்டுரை ஆசிரியரே. ஆங்கிலேயர் தென்மோடி நாட்டுக்கூத்தை பிரச்சார மேடையாகப் பாவித்தனர் என்ற கருத்துடன் எமக்கு உடன்பாடில்லை.

— மதி

## மரண அறிவித்தல்

"நாம் கிறிஸ்துவோடு இறந்தோமாயின் அவருடன் வாழ்வோம் என்பதே நமது விசுவாசம்."

(உரோமர் 6/8)

அருட்சகோதரி
அசெம்சன் ஸ்ரீவன்

யாழ் திருக்குடும்பக் கன்னியர் சபையைச்சேர்ந்த அருட்சகோதரி அசெம்சன் ஸ்ரீவன் 21–04–90 இல் மயிலிட்டி புனித சூசையப்பர் வயோதிபர் இல்லத்தில் இறைபதம் அடைந்து, அங்குள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டார் இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள், இறைமக்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

மாகாணத் தலைவி
திருக்குடும்ப மாகாண இல்லம்,
121, பிரதானவீதி,
யாழ்ப்பாணம். A/93.

## 2ஆம் ஆண்டு நினைவு



# 1990களை நோக்கி......

# தூரத்துப்பார்வை

# அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்

4

அமதிகள் வருங் கார்த்திகையில் ஒரு மாநாட்டில் ஒன்று கூடுவது பற்றி காவலனில் பங்குனி 16 இல் எழுதியிருந்தோம். அக்கட்டுரையில் "அமதிகளின் வடமாகாண வரலாற்று வேரிலும் ஒரு 'தடுமாற்றம்' (Identity crisis) இருக்குமோ?" என்றொரு வினாவையும் எழுப்பியிருந்தோம். ஆனால், இரண்டாவது கட்டுரையில் சித்திரை 12 இல் "அமதிகளும் ஈழத்து மண்ணில் ஒரு வகை வேரூன்றி, தமக்கென ஒரு வடிவத்தை உருவாக்கி வளர்ந்து விட்டவர்கள்" என்றும் எழுதினோம்.

இவை இரண்டிற்கும் முரண்பாடுண்டா? இதையிட்டு அலசி ஆராய்வது அவசியமென்பது எனது எண்ணம். வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இந்த மாநாட்டில், யாழ் அமதிகள் தமது தனித்துவத்தைத் (identity) தேட முயல்வார்கள்.

### வரலாற்றுப் பின்னணி

கடந்த கால வரலாற்றுப் பின்னணியில், நிகழ்கால வரலாற்றைப் பார்த்தால்தான் வருங்கால வரலாற்றைப் படைக்க அடியெடுத்துக் கொடுக்கலாம்.

இன்றைய உலகில் 54 நாடுகளில், 76 மாகாணங்களில் (Provinces & Delegations) 5368 அமதிகள் பணிபுரிகின்றார்கள். 1816 ஆம் ஆண்டு ஆரம்பித்த இச்சபை (அமலமரித்தியாகிகள்) 1826 ஆம் ஆண்டு திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது. பிரெஞ்சுப் புரட்சியின் எதிரொலியாக மார்சேயி நகரத்தில் வேரூன்றி வளர்ந்தாலும், இன்று உலகின் திக்கெட்டும் கிளைகள் பரப்பி வளர்ந்து நிமிர்ந்து நிற்கும் ஒரு விருட்சமாகவே இச்சபை விளங்குகின்றது. அமதிகள் சபை தனது தனித்துவத்தை திருச்சபையில் நிலைநாட்டி உள்ளது. மிகக் கடினமான சூழல்களில் நிறைவான சேவை புரிந்த பெயரும், சிறப்பும் அமல மரித்தியாகிகளுக்கு உண்டு. இச்சபையைத் துவக்கிய பேரருட்திரு. இயூஜீன் டீ மசனொட் (Eugene De Mazenod) ஆண்டகையின் வாழ்க்கை வரலாற்றையும்' இச்சபையின் துவக்க கால வரலாற்றையும் மேலதிகமாக அறிய விரும்புவோர், கரவையூர்ச் செல்வம் 1976ஆம் ஆண்டு எழுதிப் பிரசுரித்த "புரட்சியிற் பூத்த பூ" என்னும் நூலைப் படித்துப் பார்க்கலாம்.


மசனொட் ஆண்டகையின் வாழ்க்கைக் காலத்திலேயே அமதிகள் ஈழமண்ணில் (1848) காலடி வைத்துவிட்டார்கள் என்பது ஈண்டு குறிப்பிடப்படவேண்டியது.

### மறுமலர்ச்சி

இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் பின்னர், அச்சங்கத்தின் மறுமலர்ச்சி நோக்கிற்கமைய அமதிகள் தமது தனித்துவத்தை இழக்காது, துவக்கியவரின் இலட்சியத்தை மறைக்காது, காலத்தின் சவால்களை சந்திக்கும் நோக்குடன் தமது சபையின் ஒழுங்குகளை- வாழ்க்கை முறையை- உருவாக்கத்தை குழுவாழ்வை- பணிகளை- நிர்வாக அமைப்பை...

## குறுக்கெழுத்துப் போட்டி-17

(அப். பணி 13—18 அதி.)




இடமிருந்து வலம்

1. "உங்கள் குற்றத்தின் விளைவு உங்கள் தலைமேல் விழட்டும்" என்பவர் இவர். (3)
2. யூதர்கள் ஒன்று சேர்ந்து மக்களை – சின்னப்பரை கல்லால் எறிந்தார்கள். (வளம் மாறியுள்ளது) (2)
4. இவை ஊடாகவே நாம் கடவுள் அரசில்நுழைய வேண்டும் என்பது சின்னப்பர் உரை (4) (வளம் மாறியுள்ளது)
6. சின்னப்பரும் சீலாவும் சிறையினின்று வெளியேறி இவளின் வீட்டுக்குச் சென்றனர் (3)
8. சின்னப்பரின் தொழில்—செய்வதாகும் (4)

மேலிருந்து கீழ்

1. 1ம் வேதபோதக பயணத்தில் மாற்கு சின்னப்பரை இந் நாட்டில் விட்டுப் பிரிந்தார். (5)
2. இறந்தோரின் உயிர்ப்பு என்ற செய்தியைக் கேட்ட சிலர் இது செய்தனர். (4)
3. கிறிஸ்தவ நெறியை இந்நெறி எனவும் அழைப்பர் (3)
7. நீர் எம் புதல்வர் இன்று உம்மை நான் ஈன்றெடுத்தோம் இங்கு புதல்வர் என்பதன் பொருளுள்ள கடை கெட்டுள்ளது. (3)

---

## மரண ஞாபக அறிவித்தல்

ஏப்ரல் – 29

திரு. எஸ். பி. சின்னத்துரை
10 ஆம் வருட நினைவஞ்சலி
அன்பு மனைவி, பிள்ளைகள். மருமக்கள், பேரர்.
சுருவில், ஊர்காவற்றுறை A/92

ஏப்ரல் – 30

திரு. மோசஸ் டானியல்
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)
4 ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி.
யாழ் மரியன்னை பேராலயம், காலை 6-15 மணி (A/95)

---

யாழ். மறைவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

## அதிட்ட இலாபச் சீட்டிழுப்பு

01–05–1990 இல் நடைபெறவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத தடங்கலால் 02–06–1990க்குப் பின்போடப்பட்டுள்ளது.

சி. வின்சென்ற்
பொதுச்செயலாளர்

A/89

---

## மரண அறிவித்தல்

"நாம் கிறிஸ்துவோடு இறந்தோமாயின் அவருடன் வாழ்வோம் என்பதே நமது விசுவாசம்."

(உரோமர் 6/8)

அருட்சகோதரி
அசெம்சன் ஸ்ரீவன்

யாழ் திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி அசெம்சன் ஸ்ரீவன் 21–04–90 இல் மயிலிட்டி புனித சூசையப்பர் வயோதிபர் இல்லத்தில் இறைபதம் அடைந்து, அங்குள்ள சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டார் இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள், இறைமக்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

மாகாணத் தலைவி
திருக்குடும்ப மாகாண இல்லம்,
121, பிரதானவீதி,
யாழ்ப்பாணம். A/93.

---

## 2ஆம் ஆண்டு நினைவு



தேவசகாயம் கஸ்பார்

பிறப்பு: 10-08-1932
இறப்பு: 03-05-1988

"உயிர்ப்பும் உயிரும் நானே!
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்.
உயிர் வாழ்க்கையில்
என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும்
ஒருபோதும் சாகான்"

—அரு: 11: 25–26.

அன்பின் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், உறவினர்
செம்பியன்பற்று A/91

---

என்றொரு வினாவையும் எழுப்பியிருந்தோம். ஆனால், இரண்டாவது கட்டுரையில் சித்திரை 12 இல் "அமதிகளும் ஈழத்து மண்ணில் ஒரு வகை வேரூன்றி, தமக்கென ஒரு வடிவத்தை உருவாக்கி வளர்ந்து விட்டவர்கள்" என்றும் எழுதினோம்.

இவை இரண்டிற்கும் முரண்பாடுண்டா? இதையிட்டு அலசி ஆராய்வது அவசியமென்பது எனது எண்ணம். வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இந்த மாநாட்டில், யாழ் அமதிகள் தமது தனித்துவத்தைத் (identity) தேட முயல்வார்கள்.

### வரலாற்றுப் பின்னணி

கடந்த கால வரலாற்றுப் பின்னணியில், நிகழ்கால வரலாற்றைப் பார்த்தால்தான் வருங்கால வரலாற்றைப் படைக்க அடியெடுத்துக் கொடுக்கலாம்.

இன்றைய உலகில் 54 நாடுகளில், 76 மாகாணங்களில் (Provinces & Delegations) 5368 அமதிகள் பணிபுரிகின்றார்கள். 1816 ஆம் ஆண்டு ஆரம்பித்த இச்சபை (அமலமரித் தியாகிகள்) 1826 ஆம் ஆண்டு திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது. பிரெஞ்சுப் புரட்சியின் எதிரொலியாக மார்சேயி நகரத்தில் வேரூன்றி வளர்ந்தாலும், இன்று உலகின் திக்கெட்டும் கிளைகள் பரப்பி வளர்ந்து நிமிர்ந்து நிற்கும் ஒரு விருட்சமாகவே இச்சபை விளங்குகின்றது. அமதிகள் சபை தனது தனித்துவத்தை திருச்சபையில் நிலைநாட்டி உள்ளது. மிகக் கடினமான சூழல்களில் நிறைவான சேவை புரிந்த பெயரும், சிறப்பும் அமல மரித்தியாகிகளுக்கு உண்டு. இச்சபையைத் துவக்கிய பேரருட்திரு. இயூஜீன் டீ மசனொட் (Eugene De Mazenod) ஆண்டகையின் வாழ்க்கை வரலாற்றையும்' இச்சபையின் துவக்க கால வரலாற்றையும் மேலதிகமாக அறிய விரும்புவோர், கரவையூர்ச் செல்வம் 1976 ஆம் ஆண்டு எழுதிப் பிரசுரித்த "புரட்சியிற் பூத்த பூ" என்னும் நூலைப் படித்துப் பார்க்கலாம்.

மசனொட் ஆண்டகையின் வாழ்க்கைக் காலத்திலேயே அமதிகள் ஈழமண்ணில் (1848) காலடி வைத்துவிட்டார்கள் என்பது ஈண்டு குறிப்பிடப்படவேண்டியது.

### மறுமலர்ச்சி

இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் பின்னர், அச்சங்கத்தின் மறுமலர்ச்சி நோக்கிற்கமைய அமதிகள் தமது தனித்துவத்தை இழக்காது, துவக்கியவரின் இலட்சியத்தை மறைக்காது, காலத்தின் சவால்களை சந்திக்கும் நோக்குடன் தமது சபையின் ஒழுங்குகளை- வாழ்க்கை முறையை- உருவாக்கத்தை குழுவாழ்வை- பணிகளை- நிர்வாக அமைப்பை புதுப்பித்துள்ளார்கள். அனைத்துத் துறவறசபைகளும் இம்மறுமலர்ச்சிச்கு- வளர்ச்சிக்கு அழைக்கப்பட்ட போதிலும், அந்த அழைப்பை உடனேயே ஏற்ற துறவறசபைகளுள் அமதிகள் முன்னணியில் நிற்கிறார்கள்.

1982 ஆம் ஆண்டு நடைபெற்ற அமதிகளின் 30 ஆவது பொதுச்சங்கத்தில் (General Chapter) அமதிகளின் ஒழுங்கும்-வாழ்க்கை முறையும் மீண்டும் மறுபரிசீலனைக்குட்பட்டு புதியதோர் வடிவம் பெற்றது. இன்று வாழ். குருக்களுக்கும், சகோதரர்களுக்கும் அருமையான ஒரு வழிகாட்டியாக இத்துணை நூல் அமைகின்றது. இப்படிப்பட்ட ஒரு மறுமலர்ச்சி ஈழத்து அமதிகளை எவ்வளவு தூரம் தொட்டுள்ளது? இந்த மறுமலர்ச்சியால் ஈழத்து அமதிகள் எவ்வளவு தூரம் பாதிக்கட்பட்டுள்ளார்கள்? -இப்படிப்பட்ட வினாக்கள் கார்த்திகை மாநாட்டில் யாழ். அமதிகளால் எழுப்பப்படும்; எழுப்பப்படவேண்டும்.

உண்மைதான்; இப்படிப்பட்ட ஒரு சிறப்பான, 164 வருடங்களினூடாக வாழ்ந்த ஒரு சபையின் தனித்துவம் சந்தேகத்திற்குரியதல்ல; அது, நன்கு உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது, அ.ம.திகளின் வேர் திருச்சபையில் நன்கு ஆழமாக வேரூன்றி வளர்ந்துள்ளது.

கரவையூர்ச் செல்வம்

பாதுகாவலன்
PATHUKAVALAN

# வடககல ஒரு புதிய மறைவட்டாரம்

யாழ். மறைவட்டத்தில் நான்காவது மறைவட்டாரம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை யாழ் மறைவட்டம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. கிளிநொச்சி, இளவாலை, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று வட்டாரங்களுடன் மானிப்பாய் என்ற புதிய மறைவட்டாரம் இம்மாதம் 1 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அருள்திரு. லோறன்ஸ் சேவியர் அ. ம. தி. அருள்திரு. றெஜி ராஜேஸ்வரன், அருள்திரு. ஹில்லறி ஜெபநேசன் ஆகியோர் முறையே முதல் மூன்று மறைவட்டார முதல்வர்களாகப் பணியாற்றி வருகின்றனர். மானிப்பாய் என்ற புதிய மறைவட்டார முதல்வராக முன்னாள் இளவாலை மறைவட்டார முதல்வர் அருள்திரு. அன்ரன் ராஜநாயகம் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய், நவாலி-ஆனைக்கோட்டை, நாவாந்துறை, மண்டைதீவு -அல்லைப்பிட்டி, நாரந்தனை - புங்குடுதீவு, நெடுந்தீவு, கரம்பன், ஊர்காவற்துறை, திருநெல்வேலி, யாழ். பல்கலைக்கழகம், உரும்பிராய், சுன்னாகம் ஆகிய பன்னிரு பங்குகளும் இப்புதிய மறைவட்டாரத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## குருவில் முழு நம்பிக்கையே கற்பதற்கு அவசியமானது

அண்மையில் இந்திய ஆன்மீகத்தைப்பற்றிய சர்வதேச கருத்தரங்கொன்று பம்பாயில் நடைபெற்றது. சர்வதேச உரையாடல் நிலையம், இந்திய கலாசார நிலையம் என்பவற்றால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில் டி.கே.சுக்லா என்பவர் கிறிஸ்தவர்கள் குருவை இறைவாக்தரைக்கும் ஒருவராகக் கருதுகின்றனர் என்றார். ''குரு தன் சீடர்களுக்கு உலகத்தை வெறுக்க அல்ல, அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களின் வழியாக மீட்பைத் தேடும்படி அறைகூவல் விடுக்க வேண்டும்'' என அவர் மேலும் கூறினார்.

இந்திய ஆய்வாளரான மோதிலால் பண்டிற் ''உபநிடதங்களில் குரு தனது ஞானத்தை தனிப்பட்ட ஒரு சீடனுக்கு அளிப்பவராகக் காட்டப்படுகின்றார். ஆகவே குருவில் முழு நம்பிக்கை வைக்காவிட்டால் கற்க முடியாது'' எனக் கூறினார்.

## வாழ்வுதயப் பெண்கள் ஒன்றுகூடல்

வாழ்வுதயத்தின் மகளிர் அமைப்பான பெண்கள் வட்டத்தின் ஒன்று கூடல் பங்குனி 9, 10, 11 திகதியில் மன்னார் திருமறைப்பணி நிலையத்தில் நடைபெற்றது. வாழ்வுதய இயக்குனர் அருட்திரு. ஒவ்பன் இராஜசிங்கம் இவ் ஒன்றுகூடலுக்குத் தலைமை தாங்க அருட்செல்வி தெரசில்டா, ''தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். நல்ல தலைவிகளாக வாழ்வது மட்டுமல்ல தகுதியான, தலைமையைத் தேர்ந்தெடுக்கவும் தெரிந்து கொள்ளுங்கள்'' என குறிப்பிட்டார்.

திரிகோணமலை மறைவட்டத்தைச் சேர்ந்த அருட்செல்வி. லொறிவியா அவர்கள் சமூகமளித்து சிறப்பித்தார். ''சிந்தித்து செயற்படுங்கள்'' என்பதே அவரது வலியுறுத்தலாக இருந்தது.

அருட்செல்வி. ஒஸ்ரின் அவர்கள் சிக்கனமாக வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

பெண்கள் வட்ட உறுப்பினர்கள் தமது அறிக்கைகளை இயக்குனருக்கு சமர்ப்பித்தனர்.

தகவல்:- ஜெயபாலாஜி முருங்கன்

## சூழல் பாதுகாப்பு விருது

பம்பாயைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் டி சூசா ஓர் ஒல்லாந்த நிறுவனத்தின் 1990 ஆண்டு விருதைப் பெற்றுள்ளார். இவர் பல்லாண்டுகளாக சூழல் பாதுகாப்பு தொடர்பான காரியங்களில் ஈடுபட்டுவந்தவர். இவரே இந்த விருதைப் பெறும் மூன்றாவது நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் சூழல் பாதுகாப்பு பற்றிய பல்வேறு சர்வதேச சபைகளில் இருந்து வந்துள்ளார்.

## யாழ். புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி
## தனிநாயகம் தமிழ் மன்றம் வழங்கும்

## நமீபியாவுக்கு திருத்தந்தை வாழ்த்துச் செய்தி

புதிதாக சுதந்திரம் அடைந்துள்ள நமீபியா, சமூக இணக்க வாழ்வு மற்றும் ஒன்றிணைந்த வளர்ச்சி எனும் கொடைகளை எந்நாளும் அனுபவிக்கும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக அந்நாட்டிற்குத் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். புதிதாகப் பதவி ஏற்றுள்ள அரசுத் தலைவர் நியோமாவுக்குத் திருத்தந்தை அனுப்பியுள்ள செய்தியில் ஒவ்வொருவரின் மனித மாண்புக்கும், அனைத்து சமூகக் குழுக்களின் உரிமைகளுக்கும் ஆழமான மரியாதை அளிப்பதன் மூலம் சுதந்திரம் மற்றும் வளர்ச்சியின் பாதையில் நமீபியா தொடர்ந்து நடைபோடட்டும் என்று உரைத்துள்ளார். ஆபிரிக்காவிலும், உலகம் முழுவதிலும் நீண்ட கால அமைதியையும், நீதியையும் உருவாக்குவதில் நமீபியா சிறப்பு நாடாக வேண்டுமெனத் தான் ஆவல் கொள்வதாக திருத்தந்தை தமது செய்தியில் மேலும் கூறியுள்ளார்.

சுதந்திரம் அடைந்துள்ள நமீபியா மக்களோடு இணைந்து தாங்களும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாக ஆபிரிக்காவின் தெற்கு மண்டல ஆயர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. மனித இரத்த ஆறு ஓடிய நாட்கள் மறைந்து ஆனந்தக் கண்ணீரின் நாட்கள் நமீபியாவிற்கு தொடங்கியுள்ளது என்று ஆயர்கள் தங்கள் அறிக்கையில் உரைத்துள்ளனர். அனைத்து மக்களும் சுதந்திரம் அடைய வேண்டும் என்பதற்காகத் தங்கள் உயிரையும், உறுப்புகளையும் தியாகம் செய்துள்ள அனைவரையும் இந்நேரத்தில் நினைவு கூர்ந்து அவர்களுக்கும் புகழ் மாலை சூட்டுவதாக ஆயர்கள் தங்கள் அறிக்கையில் மேலும் உரைத்துள்ளனர்.

## சீனக் கத்தோலிக்க கைதிகள் பற்றி கருதினால்

சீனாவில் திருப்பீடத்திற்கு விசுவாசமாயிருக்கும் கத்தோலிக்கர்களின் கைதிகளுக்கு சீன அரசு விளக்கமளிக்க வேண்டுமென ஹொங்கொங் கருதினால் யான் பப்டிஸ்ட் வூசிங் ...

... லிக்க திருச்சபை இடைநிலையாளராக நின்று செயற்படத் தயாராக இருப்பதாகக் கருதினால் உரைத்தார்.

## நாளைச் செய்தி

## மடுவில் மறையாசிரியர்

புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவுப் பங்கைச் சேர்ந்த மறையாசிரியர்கள் தவக்காலத்தை முன்னிட்டு மடுத்திருப்பதிக்குச் சென்றனர்.

காலைத் திருப்பலி செபமாலைத் தியானம், சிலுவைப் பாதைச் சிந்தனைகள் போன்ற பக்தி முயற்சிகளில் பங்குபற்றினர். பகல் நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சியில் முல்லைத்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு. ஸ்ரலின், உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. தவராஜசிங்கம், மாங்குளம் பங்குத்தந்தை அருட்திரு. சூசைநாதர் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கினர். மடுப்பதிப் பரிபாலகர் அருட்திரு. இயேசுராஜா அடிகள் ஆசியுரை வழங்கினார். இரவு நடைபெற்ற நற்கருணை வழிபாட்டில் மறையாசிரியர்கள் அபிஷேகம் செய்யப்பட்டனர்.

தகவல்: யோ. தாவீது.

## வண. லோங்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலைக்கு மலர்மாலை அணிவித்துப் புகழுரை சாற்றுதலும் நடைபெறும்.

அயர்லாந்து நாட்டவரான வண. லோங் அடிகள் யாழ். நகரில் மன உறுதியுடனும், துணிவுடனும், செயலாற்றி யாழ். மாநிலத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமே சிறப்புஎய்தினார். அவர் கல்வி அபிவிருத்தியிலும் சமூகத்தில் பின் தங்கியவரின் எழுச்சியிலும் அரும்பணி புரி[illegible] இவருக் இவரது தீவி[illegible] செல்வாக்கினாலும்

லாந்த நிறுவனத்தின் 1990 ஆண்டு விருதைப் பெற்றுள்ளார். இவர் பல்லாண்டுகளாக சூழல் பாதுகாப்பு தொடர்பான காரியங்களில் ஈடுபட்டுவந்தவர். இவரே ...வது நபர் எனபது குறிப்பிடத்தக்கது.

இவர் சூழல் பாதுகாப்பு பற்றிய பல்வேறு சர்வதேச சபைகளில் இருந்து வந்துள்ளார்.

---


யாழ். புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி

## தனிநாயகம் தமிழ் மன்றம் வழங்கும்

## "வித்துக்கள்"

(நாட்டுக் கூத்து)

காலம்: 04–05–1990 வெள்ளி மாலை 6-30 மணி.

இடம்: புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

கவிஞர் தேவதாசனின் ஆக்கத்தில்
குரு மாணவர்களின் ஊக்கத்தில்
நமது பாரம்பரிய கலை வடிவில்
ஈழ மண்ணில் கிறிஸ்தவ விசுவாச வித்துக்களை விதைத்த தியாகிகளின் வீரவரலாறு.

வந்திடுவீர் ! கண்டிடுவீர் ! பயன்பெறுவீர் !

அன்புடன் அழைக்கும்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.

A/97


---


இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81


## சீனக் கத்தோலிக்க கைதிகள் பற்றி கருதினால்

சீனாவில் திருப்பீடத்திற்கு விசுவாசமாயிருக்கும் கத்தோலிக்கர்களின் கைதிகளுக்கு சீன அரசு விளக்கமளிக்க வேண்டுமென ஹொங்கொங் கருதினால் யான் பப்டிஸ்ட் வூசிங் சுங் விண்ணப்பித்துள்ளார். திருப்பீடத்திற்கு விசுவாசமாயிருக்கும் கத்தோலிக்கரில் 30ற்கும் மேலானோரின் கைதிகளுக்கான காரணத்தை வெளியிட இம்மத விவகாரத்துறை தேவையான வழிமுறைகளை விரைவில் கையாள வேண்டுமென்று கருதினால் வூ கருத்துத் தெரிவித்தார். இக்கைதி விவகாரங்களின் விளக்கங்களுக்கு ஹொங்கொங் கத்தோலிக்க திருச்சபை இடைநிலையாளராக நின்று செயற்படத் தயாராக இருப்பதாகக் கருதினால் உரைத்தார்.

---

## உயிர்ப்பு விழா ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்த அழைப்பை ஏற்று. இம்மக்கள் பேரணியாகக் கலந்துகொண்டு 'சுவரில்லாத பேர்லின்', 'இராணுவத் தளபாடங்கள் இல்லாத ஜேர்மனி' 'பிரிவினையில்லாத ஒன்றுபட்ட ஐரோப்பா' போன்ற கோஷங்களை எழுப்பினர்.

---

## நுரரளைச் செய்தி

### "யேசுவின் பாடுகள்"

மேற்படி பாஸ்கு நாடகம் தபசு காலத்தை முன்னிட்டு பீற்று தோட்ட கத்தோலிக்க இளைஞர் மன்றத்தால் நுவரெலியா புனித சவேரியார் தேவாலயத்தில் கடந்த சித்திரை 4 ஆம் திகதிமேடையேற்றப்பட்டது.

இவ்வைபவத்தை வண. பிதா. இங்ஸ்லிசில்வா அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு பல்வேறு மறைத் தலைவர்களும், பிரமுகர்களும், கன்னியாஸ்திரிகளும்விசேட விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

அ. ஜோண்சன்.
நுவரெலியா.

---

நடைபெறும்.

அயர்லாந்து நாட்டவரான வண. லோங் அடிகள் யாழ். நகரில் மன உறுதியுடனும், துணிவுடனும், செயலாற்றி யாழ். மாநிலத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமே சிறப்புஎய்தினார். அவர் கல்வி அபிவிருத்தியிலும் சமூகத்தில் பின் தங்கியவரின் எழுச்சியிலும் அரும்பணி புரிந்தார், இவரது தீவிர முயற்சியினாலும், மேலிடத்தில் இவருக்கிருந்த செல்வாக்கினாலும் வடக்கிற்கு விமானச் சேவையைப் பெற்றுக்கொடுத்தார். இவர் தலைமையில்தான் ஒரு கோடி ரூபா செலவில் யாழ். பொது நூலகம் நிறுவப்பட்டது. பொம்மைக் கூத்து முறையில் நிகழ்ந்த பாடுகள் திருகாட்சி இவருடைய வழி நடத்துதலினால் பத்திரிசியார் கல்லூரியில் நடிகர்களினால் முதன்முதலாக நடத்தப்பட்டது.

---

## குளிரில்......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி 27 முதல் மார்ச் 5 வரை மாணவர்கள் ஏழைகளோடு ஒருமைப்பாட்டில் ஈடுபட்டபோது மார்ச் 1 ஆம் திகதி இந்த அனுபவத்தைப் பெற 20 பாகைக்கும் குறைவான குளிரில் படுத்துறங்கினர்.

---

**உன்னைமீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**